Sep 1935

R673002K,N28
N35-8.9
187110

414

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 8—No. 9.

17 OCT 1935
MADRAS

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் அ | யுவ ஆண்டு புரட்டாசித் திங்கள்<br>1935 ஸு செப்டம்பர்மீ | இதழ் கூ |
|---|---|---|

உள்ளுறை — பக்கம்

| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| திருவள்ளுவர் ... ... | ... ந.கூகூ |
| வீட்டிலும் நாலும் ... ... | ... ந.எஉ |
| சைவ இளைஞர் சமயத் தொண்டு ... | ... ந.எந |
| 'கழுக்கையர்' என்பதன் பொருள் ... | ... ந.எரு |
| திருமங்கையாழ்வார் ... | ... ந.எகூ |
| திருநீற்றின் சிறப்பு ... | ... ந.எஅ |
| முதல்வன் து அறக்கருணையும் மறக்கருணையும் | ... ந.அக |
| சைவத்தேர்வு அறிக்கை ... | ... ந.அச |
| கல்லாடத்திலுள்ள திருவிளையாடற் பகுதிகள் | ... ந.அரு |
| சித்தாந்த சாத்திரம் ... ... | ந.உக - ந.ருஉ |

ஆசிரியர் :—ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—அ. சிதம்பரநாத செட்டியார், B. A. (Hons.)

சைவ சித்தாந்த மகாசமாஜம்
"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

ஆண்டுச் சந்தா ரூபா 2. 1935 தனிப் பிரதி அணா 4.

# மதிப்புரைகள்

**மண்ணியல் சிறுதேர்:**—தமிழ் மொழியிலே நாடக நூல்கள் ஒருசிலவேயுள்ளன. இவை தாமும் மிகச் சமீப காலத்திலே தோன்றியனவாகும். இவ்வகை யிலக்கியம் இன்னும் சைசவ பருவத்திலேயுள்ளதென்பதும், கற்றுவல்ல அறிஞர்களும் கவிஞர்களும் நாடக நூல்கள் இயற்றித் தமிழ்மொழியை வளம்படுத்த வேண்டுமென்பதும் தமிழ் மக்களனைவரும் அறிவர். இங்ஙனம் வளம்படுத்துதற்குப் பிறமொழிகளிலுள்ள சிறந்த நாடக நூல்கள் தமிழில் தகுதிபெற மொழிபெயர்க்கப்படுதல் இன்றியமையாத வேண்டற்பாலதாம். '**மண்ணியல் சிறுதேர்**' என்ற இந்நூல் இவ்வேண்டற்பாடு நிரம்பும் வண்ணம் மொழி பெயர்க்கப்பெற்ற நாடகமாகும்.

இம்மொழி பெயர்ப்பின் மூலநூல் வடமொழியிலே சூத்திரகன் என்னும் அரசரால் இயற்றப் பெற்ற '**மிருச்சகடிகம்**' எனப் பெயரிய நாடக நூலாம். பத்து வகையான நாடக நூல்கள் வடமொழியிற் கூறப்படுகின்றன. அவற்றுள் இது **பிரகரணம்** என்னும் இனத்தைச் சார்ந்தது. காளிதாச மஹாகவிக்கு முற்பட்டவரும் நாடகப் பேராசிரியர்களுள் ஒருவருமான பாஸ மஹாகவியாற் புதுவதாகப் புனையப்பெற்ற '**சாருதத்தம்**' என்னும் நாடகமே சூத்திரகனியற்றிய இந்நூலுக்கு முதனூலாகும். சாருதத்தத்திலுள்ள கதையினைப் பலபடியாகப் புதுமையுறச் செய்து மிருச்சகடிகம் இயற்றப் பெற்றுள்ளது. வடமொழி வாணர்கள் மிகப் பாராட்டிப் போற்றும் பெரு நாடக நூல்களுள்ளே இம்மிருச்சகடிகமும் ஒன்று. எனவே, இதன் சுவையைத் தமிழ்மக்கள் துய்த்து இன்புறுவார்களென்பது ஒருதலை.

மொழிபெயர்ப்பு நூல்கள் எல்லா வகையினும் போற்றத் தக்கவாயமைதல் மிக அருமை. ஓராசிரியன் ஒரு சிறந்த நூலைப் பதம் விடாது மொழிபெயர்த்துவிடலாம். ஆனால், அம்மூலநூலின் கருத்து விசேடங்களையும், சுவைகளையும், அழகுகளையும் அங்ஙனே மொழி பெயர்ப்பு நூலின்கண் அமைத்தல் எளிதிற் கைகூடுவதன்று. இவ்வரிய செயலை '**மண்ணியல் சிறுதேர்**' நன்கு முற்றுவித்திருக்கின்றது என்றே கூறல்வேண்டும். மூலத்திலுள்ள சுலோகங்களெல்லாம், தமிழ்ச்சுவை ததும்பும் செய்யுட்களாலே மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. வடமொழி நூலின் நாடகச் சுவையை நன்குணர்ந்து அதில் ஈடுபட்டு உரைநடைப் பகுதிகள் ஆக்கப்பெற்றுள்ளன. ஒவ்வொரு பக்கத்திலும் கொடுக்கப்பெற்றுள்ள அடிக்குறிப்புக்கள் மொழி பெயர்ப்பாசிரியரது வடமொழி யுணர்ச்சியையும் இரஸிகத்வத்தையும் நன்கு புலப்படுத்துகின்றன.

இச்சிறந்த தமிழ் நாடகத்தை இயற்றியவர்கள் மகிபாலன்பட்டி பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள். இவர்களது குணவிசேடங்களையும் கல்விப் பெருக்கையும் அறியாதார் தமிழ்நாட்டில் இல்லை.

# திருக்குறள் விளக்கப் புத்தகசாலை.

---

திருக்குறள் விளக்க ஆசிரியர் கி. குப்புச்சாமி முதலியார் அவர்களின் ஞாபகார்த்தமாக அவருடைய இல்லின்கண் ௸ புத்தகசாலை யொன்று ஸ்தாபிக்கப்பட்டுளது. அவ்விடத்தில் எல்லாத் தமிழ் சைவ நூல்களும் (யாழ்ப்பாணம் பிரசுரங்கள் உட்பட) சரசமான விலைக்கு விற்கப்படும். தமிழ் அபிமானிகள் ஆதரிப்பார்களாக.

கி. சிவப்பிரகாச முதலியார்,

3/2, பிள்ளையார் கோயில் தெரு, கிருஷ்ணம்பேட்டை.

திருவல்லிக்கேணி போஸ்ட், சென்னை.

Giri Press, Triplicane.

Registered No. M. 2330.

# சித்தாந்தம்

“ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு”

| மலர் ௮ | யுவ ஆண்டு புரட்டாசித் திங்கள் 1935௵ செப்டம்பர்௴ | இதழ் ௯ |
|---|---|---|

## திருவள்ளுவர்

[மறைமலையடிகள்]

செந்தமிழ் மொழிக்கொரு நந்தாமணிவிளக்காய்த் தோன்றித், தன்கட் சுடர்ந்தொளிரும் அறிவுப்பேரொளியைத், தான்பிறந்த தமிழ் நாட்டவர்க்கு மட்டுமேயன்றி, இந்நிலவுலகின் பிறபகுதிகளிலுள்ள பிறநாட்டு மாந்தர்க்கும் வேற்றுமையின்றி வீசி, எல்லாரையும் ஒரேமுழு முதற் கடவுளாம் ஒப்பற்றதந்தைக்கு உரிமை மகாராய்வைத்து, அவரறிய வேண்டும் அரும்பொருள் முற்றும் ஒருங்கே அறிவுறுத்துந் தெய்வத் திருக்குறள் என்னும் நூலை அருளிச்செய்த பெரியாரையும் அவரது வரலாற்றையும் அறிய விரும்பாதார் யார்? எவரும் இராரன்றோ? ஆதலால், அவரைப் பற்றிய குறிப்புகள் சிலவற்றை இங்கு வரைவாம்.

திருவள்ளுவ நாயனார், கிறித்துசமய முதல்வரான ஏசுமுனிவர் பிறப்பதற்கு முப்பதாண்டுகள் முன்னரே பிறந்தருளினா ரென்பதை மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் என்னும் எமது பெருநூலிலே பலநூற்சான்றுகள் கொண்டு விளக்கிக்காட்டி யிருக்கின்றாம். அதன் விரிவை அங்கே கண்டுகொள்க.

இவர்தந் தந்தையார் பெயர் 'பகவன்' எனப்படுமென்றும், இப்பகவன் தமிழ்நாட்டுத் தாபதவொழுக்கத்தினரான ஓர் அந்தணராவரென்றும், இவர்தம் அன்னையார் கருவூரிற் புலையர் குலத்திற் பிறந்து 'ஆதி' எனப் பெயர் பெற்றவரென்றுங் கபிலரகவல் கூறுகின்றது. இனி, ஞானாமிர்தம் என்னும் வீட்டுநூல் திருவள்ளுவரின் தந்தையார் பெயர் 'யாளிதத்த முனிவர்' எனக் கூறுமேனும், இவர்தம் அன்னையார் ஒரு புலைச்சி யென்றே மேலைவரலாற்றோடு ஒருப்பட்டுரைக்கின்றது. யாளிதத்த முனிவரென்பது இயற்பெயராகவும் பகவன் என்பது சிறப்புப் பெயராகவும் திருவள்ளுவரின் தந்தையார் ஒருவர்க்கே வழங்கிவந்தமை இவ்விரு நூல்களாலும், அறியப்படும். தமிழ்நாட்டிலுள்ளவர்கள் தம்மின் மூத்தாரையுங் கல்வியறிவின் மிக்காரையும் பிறசிறப்புகள் உடையாரையும் அவர்க்குரிய இயற்பெயரான் வழங்குவது குற்றமாமெனக்கருதி, அவர்பிறந்த ஊர்ப்பெயரானாதல் அன்றி வேறு சிறப்புப்பெயர்களானாதல் அவரைக் குறித்து உரையாடுதல் தொன்றுதொட்ட வழக்கமாய்ப் போதருகின்றது. ஆதலாற், றிருவள்ளுவரின் தந்தையார்க்கு இரண்டு நூல்களில் இருவேறு பெயர்கள் ஓதப் பட்டதில் ஏதும் மாறுபாடில்லையென்க. திருவள்ளுவர் தந்தையாரின் பெயரளவிற் சிறிதுமாறுபாடு காணப்படினும், அவர் தவவொழுக்கத்திற் சிறந்த முனிவரென்பதும், அவர்தம் அன்னையார் ஒரு புலைச்சியே யென்பதுங் கபிலரகவற்கும் ஞானாமிர்தத்திற்கும் ஒத்தமுடிபாயிருத்தலே கருத்திற்பதிக்கற்பாலதாகும். அம்முனிவர்பிரான் விழுமிய அந்தணர்மணியா யிருந்தும், பிறப்பளவில் இழிந்தாளாகக் கருதப்படும் ஒரு புலைச்சியை விழைந்து அவளை அவர் மணந்துகொண்ட பான்மையினை நினைத்துப் பார்க்குங்கால், அத்துணைச்சிறந்த பெரியாருள்ளத்தைக் கவரத்தக்க மனநலமுங் கற்பொழுக்கமும் வனப்பும் அவ்வம்மையார் உடையராயிருந்தாராகல்வேண்டுமென்பது இனிது விளங்காநிற்கும். தாமீன்ற குழவிகளை ஈன்ற இடங்களில் உள்ளார்க்கே தந்து பற்றின்றிச் சென்ற பகவனாரின் கருத்துக்கு, மாறின்றி யொழுகி, அவருடன் நிழல்போற்



சென்ற ஆதியம்மையாரின் பற்றற்ற, உள்ளமுங் காதற் கற்பொழுக்கமும் மிகவும் பாராட்டற் பாலனவாகும்.

இனித் 'தம் தந்தையார் பெயர் 'பகவன்' என்றிருத்தலையுந், தம் தாயார் பெயர் 'ஆதி' என்றிருத்தலையுங்கருதித், தம்மைப்பெற்ற அவ்விருவர்செய்த நன்றியையும் அன்பினால் அகங்குழைந்துருகி நினைந்தமையாற்றான், ஆசிரியர் திருவள்ளுவர் தாம் இயற்றியருளிய திருக்குறள் என்னும் ஒப்புயர்வில்லாத் தனிச்செந்தமிழ் நூலின் முகத்தே கடவுள் வழிபாடு செய்கின்றுழி அம்முழுமுதற்கடவுள் பெயராக ஆதிபகவன் என்னும் அவ்விரு வடசொற்றொடர்ந்த தொடரை முதற்செய்யுளிலேயே அமைத்தருளினார். 'திருக்குறள்' நூன் முழுதுந் தனிச்செந்தமிழ்ச் சொற்களினாலேயே யாத்திட்ட அப்பேராசிரியர், அந்நூன்முகத்திற் கடவுளைக் குறித்தற்கு எத்தனையோ பல தனித்தமிழ்ச்சொற்களிருப்பவும் அவற்றையெல்லாம் விடுத்து, 'ஆதிபகவன்' என்னும் வடசொற்றொடரைத் தெரிந்தமைத்ததற்குக் கழிபெருங் காரணம் ஒன்றிருத்தல் வேண்டுமன்றோ? அக்காரணந்தான் யாதோவெனிற், றம் தாய்தந்தையர் தமக்குச் செய்த நன்றியை அதனால் நினைவுகூர்தற்கு அவர் விழைந்தமையே உறுபெருங் காரணமாமென்க. இங்ஙனமே, நூலியற்றும் பேராசிரியர், தம் தாய் தந்தையர் உடன்பிறந்தார் சுற்றத்தாரைப் பற்றிய குறிப்புகளையுந், தமது வாழ்க்கைக் குறிப்புகளையுந் தாமியற்றும் நூல்களிலே ஆங்காங்குக் குறிப்பாலும் வெளிப்படையாலும் நுவன்று செல்லுதல் இயல்பு. சைவசமயாசிரியர்களான திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வருந் தாம் அருளிச்செய்த தேவார திருவாசகங்களில் தமது வரலாற்றுக் குறிப்புகளைப் பெரும்பாலும் வெளிப்படையாகவுஞ் சிறுபான்மை உய்த்துணரவைப்பாகவும் அமைத்துரைத்தல் காண்க. ஏனை நூலாசிரியர் அவர்போற்றம்முடைய குற்றங் குறைகளை இறைவனிடத்தே முறையிட்டுச் சொல்லிப் பாடுதலிலராய், அறம் பொருள் இன்பங்களையும், ஒருகதை தழுவி வருந் தொடர்நிலைச் செய்யுட்களையும் இயற்றினார்களாகலின் அவை தம்மிற் றம்முடைய வாழ்க்கைக் குறிப்புக்களை வெளிப்

படையாய்ச்சொல்ல இடம்பெறாது, அவைதம்மிற் சிலவற்றை ஆங்காங்குக் குறிப்பாகவே நுவலலாயினர். நூலாசிரியர்க்குரிய இவ்வழக்காறு, தமிழ்நூலாசிரியர்பாலேயன்றி, ஆங்கிலம் ஆரியம் முதலான ஏனை மொழிநுலாசிரியர்பாலுங் காணப்படுதலும், அவருடைய நூல்களை ஆராய்ந்து நுட்பங்கள் வரையும் உரைவல்லார்கள் அதனைத் தெரிந்தெடுத் தெழுதலும் அவ்வந் நூல்வல்லார்வாய்க் கேட்டுணரப்படும். ஆகவே, இங்குத் தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார், தமது தெய்வச் செந்தமிழ் மொழிமேல் வைத்த பற்றினையுஞ், செந்தமிழாக்கங் கண்ணுங் கருத்துமாய்ப் பேணுந் தமது காலத்து நல்லிசைப் புலவர் மேற்கொண்ட தனிச்செந்தமிழ் வழக்கினையும் மீறி, "ஆதிபகவன்" என்னும் வடசொற்றொடரால் முழுமுதற் கடவுளுக்குத் தமது நூலின் முதலிலேயே பெயர் கூறுவாரானது, அத்தொடரின் முன்னின்ற 'ஆதி' என்பது தம் மன்னையார்க்கும் பின் நின்ற 'பகவன்' என்பது தம் தந்தையார்க்கும் பெயராயமைந்து, அவ்விருவரையுந் தமது நினைவிற் கொணர்தல் பற்றியேயாமென்பது திண்ணம். திருவள்ளுவனாரோடு உடன் பிறந்தவரான ஔவையாரும்,

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

என்று கூறியிருத்தலை உய்த்துணருங்கால் அவருந் தவநலத்திற் சிறந்த தம்தாய்தந்தையரை நினைந்தே அங்ஙனங் கூறினார் என்பது புலனாகும். (தொடரும்)

## விட்டிலும் நானும்

[கீ. இராமலிங்க முதலியார், பி. ஏ.]

என்னஎன் றெண்ணுகின் றனையதை விட்டிலே !
இன்னலென் றறிகிலை, ஈதென விந்தையோ !!
வெம்மைசூழ் அனலென, வெற்றொளிப் பிழம்பென,
தம்மைவந் தணுகியார் தரிக்கொணாத் தீதென
உற்றுநீ ஓர்ந்திலை; உந்திநீ உவப்பொடு
பற்றுதீப் பாழினில் பதைபதைத் தோடுவை ;
கதுமெனக் கனலதிற் காய்ந்துநீ மாறுவை ;
இதுவுநற் செயலதோ இடர்விழைந் தோடலே ?
இனியநற் கனியென, இன்பமீப் பொருளென,
தனிச்சுவைப் பாகெனத் தவறிநீ நினைதியோ ?
கூற்றுனக் கென்றதைக் கூர்ந்துநீ ஓர்ந்திலை,
தேற்றுளங் கொண்டிலை, தெளிபொருள் ஆய்ந்திலை,
துன்பமென் றறிகிலைத் துணையெனக் கொண்டனை
இன்பமென் றெண்ணினை, இம்மியிற் கருகினை !
அந்தோ!என் செய்குவல்? அறிவிலா விட்டிலே !
எந்தன துள்ளமும் எவ்வமென் றோர்கிலா
துலகபற் பொருண்மிசை ஊர்ந்துஊர்ந் தேடுதே !
நலமிலாப் பாழ்களை நலமென நாடுதே !!
நீயுடல் கருகினை! நானுளங் கருகுவன் !!
மாயையென் றோர்க்கிலோம், மாய்ந்துமாய்ந் தயர்கிறோம் !!!
உன்னைநாட் கண்ணுறும் உலகினர் என்போலோர்
இன்னலாம் மண்ணிதில் இச்சைபோய் வாழரோ.



## சைவ இளைஞர் சமயத் தொண்டு

### திருவதிகையில் தீர்மானித்தது

[கீ. இராமலிங்க முதலியார்]

**இவ்வாண்டில் சைவ இளைஞர்கள் செய்ய ஒத்துக் கொண்ட சமயத் தொண்டு**

(திரு. ஞானியார் அடிகளாரது அருட்பார்வை பெற்றது.)

க. காலையில் எழுந்ததும், திருவதிகை வடவண்டை மாடவீதியில் திரு. ஞானியார் அடிகள் கிழக்கு நோக்கியமர, எதிர் அமர்ந்து சிந்தனை செய்த காட்சியைப் படமாக மனதில் நினைந்து, அதே திருக்கூட்டத்தில் இருப்பது போல எண்ணி, எல்லாம் வல்ல இறைவனை வழிபடுதல் வேண்டும்.

௨. காலைக் கடன்களை முடித்ததும், கந்தர்கலிவெண்பா அநுபூதி முதலிய கனிந்துருக வல்ல பாக்களை முறையாக ஓதுதல் வேண்டும்.

௩. வீட்டிலும், அணித்தாயுள்ள இல்லங்களிலு முள்ளச் சிறுர்களைக் கூட்டி, அவர்களுக்கு நம் செந்தமிழ்த் திருப்பாட்டுக்களைப் பொருளுக் கேற்ற மெய்ப்பாடுடன் பயிற்றுவித்தல் வேண்டும்.

௪. தனியாக ஓதுதலோடு நில்லாமல், வீட்டிலுள்ள எல்லோரையும், அயலாரில் இயன்றவரையும், உடன் கூட்டிக் குறித்த நேரத்தில் நாடோறும், நம்தமிழ் மறையில் குறித்த பாக்களைக் கலந்து பாடுதல் வேண்டும்.

௫. நமது நாயன்மார்களின் மீன் நாட்கள் தோறும் அவர்களது வரலாற்றினைப் படித்தும், மற்ருருக்கு எடுத்து விளக்கியும் வருதல் வேண்டும்.

௬. உள்ளூரிலும், அடுத்துள்ள ஊர்களிலும், நேரும் விழாக் காலங்களிலும் மக்கள் கூடும் நேரங்களிலும், நமது சமயக் கருத்துக்களை எடுத்து விளம்புதல் வேண்டும். இத்தொழிலில் எவ்வித எதிர்ப்பு நேர்ந்தாலும் பொறுமை துதைந்து தொழிலாற்றல் வேண்டும்.

௭. நமது சமாஜத்தின் வெளியீடாகிய 'சித்தாந்தம்' என்னும் திங்கள் தாளை எல்லோரும் வாங்கும்படி, அதாவது சமாஜத்திற்கு அங்கத்தினராகச் சேரும்படி பலரையும் தூண்டுதல் வேண்டும். சமாஜப் பிற வெளியீடுகளை எல்லோரும் வாங்கிப் பயன் பெறும்படிச் செய்தல் வேண்டும்.

௮. மேற் குறித்த தொண்டுகளில் எவ்வெவ்வளவு செய்தாயிற்று என்பது பற்றி அவ்வப்போது இவ்வாண்டைய இளைஞர் மகாநாட்டுத் தலைவருக்குத் தெரிவித்து வருதல் வேண்டும். (விலாசம்: 'திருவருளகம்' 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை)

௯. அவ்வப்போது வேண்டும் விளக்கத்திற்குத் தலைவர் வாயிலாகவோ, நேராகவோ, நமது திரு. ஞானியார் அடிகளாரை எழுத்து மூலமோ, எதிர்ப்படு மூலமோ, நாடுதல் வேண்டும்.



௧௦. அடுத்த ஆண்டு விழாக் கூட்டத்தில் எல்லோரும் கலந்து கொள்ளும்போது, ஒவ்வொரு இளைஞரும் செய்த தொண்டின் சுருக்கத்தை எழுதித் தந்து மேலும் செய்ய வேண்டிய முயற்சிகளைப் பற்றிச் சிந்தித்தல் வேண்டும்.

# 'கழுக்கையர்' என்பதன் பொருள்

[தி. கி. நாராயணசாமி]

சம்பந்தர் தேவாரத்துள் கழு என்ற சொல் வந்துள்ள இடங்கள் சில கீழ்வருமாறு:—

1 பட்டை நல்துவராடையினு ரொடும் பாங்கிலாக்
கட்டமண் கழுக்கள் சொல்லினைக் கருதா தூநீர். 2-8-10

2 பெரிய வாகிய குடையும் பீலியும் அவை வெயிற்காவாக்
கரிய மண்டைகையேந்திக் கல்லெனவுழி தருங் கழுக்கள். 2-91-10

3 புத்தர் சமண் கழுக்கையர் பொய்கொளச்
சித்தத்தவர்கள் தெளிந்து தேறின. 3-22-10

4 கையிலுண்ணுங் கையருங் கடுக்கடின் கழுக்களும்
மெய்யைப் போர்க்கும் பொய்யரும் வேதநெறியை யறிகிலார். 3-53-10

5 கல்வளர் ஆடையர் கையிலுண்ணுங் கழுக்கள் இழுக்கான
சொல், வளமாக நினைக்க வேண்டா. 3-104-10

இவற்றுள் "புத்தர் சமண்கழுக்கையர் பொய்கொளாச் சித்தத்தவர்கள் தெளிந்து தேறின" என்ற சொற்றொடருக்குக் கயப்பாக்கம் சதாசிவ செட்டியாரவர்கள் தமது அகத்தியர் தேவாரத்திரட்டு உரையில் (பக்கம் 66) "சமண்கழுக்கையர் - கழுக்கையராகிய சமணர் என்று மாற்றியுரைக்க. தஞ்சமய நிலைக்கும் கொண்ட கொள்கைக்கும் தவறு வந்த வழித் தம்மை அழித்துக்கொள்ளும் பொருட்டுக் கையினிற் கழுவேந்திய தன்மையர் இவரென்ப" என்றுகூறி யுள்ளார்

கள். இவ்வுரைமற்ற வரிகளை நோக்கும்போது பொருந்துவதாயில்லை. அவற்றை அன்பர்கள் சமண நூல்கள் கொண்டு தெளிவு படுத்தல் நலம்.

[குறிப்பு:—வழியிலுள்ள பூச்சி புழுக்களை ஓச்சி விலக்குவதற்கென சமணர்களுட் சிலர் மயிற்பீலியையும் வேறுசிலர் கழுகு இறகுக்கொத்தையும் கையிற்பிடித்துக் செல்லுதல் அக்காலத்திய வழக்கு. கழுகிறகு பிடித்தவர் கழுக்கையரெனப்பட்டனர். இது சமண அறிஞர் ஒருவர் சமாஜத்தலைவர் திரு. வி. க. அவர்களிடம் கூறிய செய்தியாகும்.—பத்திராசிரியர்.]

# திருமங்கையாழ்வார்

[ஜே. ரவூல் ஹிலேர், புதுவை]

திருமங்கை யாழ்வார் இற்றைக்கு 4632 வருடங்கட்கு முன் சோழமண்டலத்தில், நம் முன்னோர் செய்த புண்ணியத்தின்பலனாகத் திருவாலி நாட்டில் திருக்குறையலூரில் கள்ளர்மரபில் உதித்தார். இவர்பிறந்தபோது நீலநிறமுடையவராயிருந்ததனால் இவருக்கு நீலன் என்றொரு இயற்பெயரும் வழங்கலாயிற்று. இவருக்கு வழங்கிய வேறு பெயர்கள் ஆலிநாடன், அருள்மாரி, அரட்டமுக்கி, அடையார்சீயம், கலியன், நாலுகவிப்பெருமாள் என்பன.

இவர் சிறுவயதிலேயே தமதுகுலா சாரத்துக்கேற்ப வில்வித்தை நன்றாகப் பயின்று சோழராஜனிடத்தில் சேனாதிபதியாக அமர்ந்தார். சோழராஜனுக்கும் அவன் பகைவர்களுக்கும் கடும்போர் ஏற்பட்டகாலத்தில் தனது அரசன் பக்கம் இருந்து பகைவரை வென்றார். இதனால் மகிழ்ச்சியடைந்த சோழராஜன் இவர் பராக்கிரமத்தை மெச்சி இவருக்கு பரகாலனென்றப் பெயரையளித்து மங்கை நாட்டுக்கு அரசனாக்கினான்.

இவ்வாறு இருக்குங்காலத்தில் அச்சோழ நாட்டிலேயே திருவெள்ள குளம் என்றவூரில் அவதரித்த குமுதவல்லி என்னும் கன்னிகையின் கட்டழகைக் கேள்வியுற்று அவள்



பால்மனம் சென்றவராய் அவளது தாய்தந்தையரை அவளைத் தனக்கு விவாகம் செய்துகொடுக்கும்படிக் கேட்டார். அவர்களும் இசைந்து அவளை இவருக்குக் கன்னிகாதானம் செய்யவிருக்கையில், குமுதவல்லி ஆயிரத்தெட்டு வைஷ்ணவர்களுக்கு நாடோறும் அன்னதானம் செய்து அவர்களுடைய பாததீர்த்தத்தைப் பருகினால் அன்றி அவரை மணம்செய்து கொள்ள மறுத்துவிட்டதால் அவ்விரதத்தை நிறைவேற்றுவதாக வாக்களித்து அவளை மணம் செய்து கொண்டார்.

விவாகம் நடந்தேறியபிறகு தன் வாக்கின்படி பாகவதாராதனத்தை மேற்கொண்டார். ஆனால் சில நாட்களில் தன் கைப்பொருள்கள் எல்லாம் கரைந்தன. ஆகையால் கொள்ளையிட்டாவது கைங்கர்யத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணங்கொண்டவராய் கொள்ளையிடவாரம்பித்தார். இவர் இத்தீச் செயல்களில் நுழைந்தது வைஷ்ணவர்களை உண்பிப்பதற்கேயாயினும் அரிபெருமான் இதையும் நல்லதாக நயந்து தான் கிருபாகடாக்ஷம் பண்ணி ஆதரிக்கவேண்டுமென்றெண்ணியவராய் தன்தேவியோடு இவர் கொள்ளையடிக்கப் போகும்வழியில் தோன்றினார். ஒன்றுமறியாத நமதாழ்வார் அவரையும் கொள்ளையிட ஆரம்பிக்க, பகவான் உண்மையை வெளியிட்டு அஷ்டாக்ஷர மகா மந்திரத்தை உபதேசித்து மறைந்தார். உடனே இவருக்குக் கவிதா விற்பனமேற்பட்டு அரிபிரானைத் துதித்து இனிய பாடல்கள் பாடலானார்.

இவர் செய்த நூல்கள், பெரிய திருமொழி திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் முதலியனவாம்.

இவர் தம் இளம் பிராயத்தில் பெருமாளிடத்து மனதைச் செலுத்தாமல் உலகப் பற்றில் ஈடுபட்டவராயிருந்த போதிலும் பகவான் அருளைப் பெற்ற பிறகு தன் வாழ்நாட்களை யெல்லாம் அரிபக்தியில் கழித்து சமாதி யென்கிற மகா யோகத்தால் பரமபத மடைந்தார்.

# திருநீற்றின் சிறப்பு

[S. A. அமிர்தகடேஸ்வரம் பிள்ளை, வேளாங்கண்ணி]

(மலர் - அ. இதழ் - அ. ௫௬௦-ம் பக்கத் தொடர்ச்சி)

"என்னீறு பூசினும் திருவால வாயான்திரு நீறென்றே பூசிற்
பன்னூ றுகோடி சென்மத் தறிந்து செய்க்கொடும் பாவம் தீரும்"

என்றது இவண் கவனிக்கத் தக்கது.

அருந்தவராகிய நமதாருயிர் அருணகிரியண்ணல்,

"திகழுமலங் கற்கழல் பணிவார் சொற்படி செய்யவோ
திகழுமலங் கற்பகவூர் செருத்தணி செப்பி வெண்பூ
திகழுமலங் கற்பருளு மென்னுவமண் சேனையுபா
திகழுமலங் கற்குரைத் தோனதில்லை தெய்வங்களே"

(க - து) தன்னடி வணங்கும் மெய்யன்பர்கட்கு நன்னெறியாகும் தேவாரம் உரைத்தருளி, கற்பகவூர் முதலாய திருப்பதிகளைப் போற்றுது, திருநீற்றின் சிறப்பை யுணர்ந்து அதைத் தரிக்காத சமணர்களைக் கழுவேறும் வண்ணம் வாதில்வென்ற சம்பந்தப் பிள்ளையாராக அவதரித்த குமாரக் கடவுளன்றி வேறு தெய்வங்களில்லை.

"தென்னவ னங்கனஞ் சூழ்காத்திரி நகரு லகாத்
தென்னவ னங்கனந் தப்பத னீட்டினன் செல்வமுன்பின்
தென்னவ னங்கனன் னீற்றுற் றிருத்திய தென்னவின்னந்
தென்னவ னங்கனங் கைச்சிலைக் கூனையுந் தீர்த்தருளே"

(க - து) திருப்பரங்குன்று முதலாய தலங்களி லுறைபவனே! கூற்றைச் செற்ற சிவபிரான் செல்வனே! முன்னம் கூன்பாண்டியனது நோயைத் திருவெண்ணீற்றுற் றிருத்தியதே யன்ன, மாரன் தமியேன்மீது சரந்தொடா வண்ணம் அவனது கைச்சிலைக் கூனையும் தீர்க்கவேண்டுகின்றனன்.

"திருக்கை யம்போதிக ளோகஞ்சமோ நஞ்சமோ திருமால்
திருக்கை யம்போ செய்யவேலோ விலோசனந் தென்னனங்கத்
திருக்கை யம்போருகக் கைநீற்றின் மாற்றித் தென்னூல் சிவபத்
திருக்கை யம்போக வுரைத்தோ னதில்லை தெய்வங்களே"



(க - து) பண்டு சம்பந்தர் அவதாரங் கொண்டு சமண மதத்திற்கு இடங்கொடுத்தக் கூன்பாண்டியனது நோயைத் திருவெண்ணீற்றால் மாற்றியும், எச்சமயம் பெரிதோவெனும் ஐயமறவும் சைவசித்தாந்தமே மெய்யென்று நிலைபெறவும், இருக்கு வேதசாரமாம் தேவாரமோதி யருளிய குமரவேளினது குன்றத்தில் வாழும் கன்னிகையின் கண் சமுத்திரமோ, அம்போ, வேலேயோ.

எனக் கந்தரந்தாதியின்கண் திருநீற்றின் சிறப்பைக் கூறி யிருத்தலால் வெண்டிருநீற்றின் அருட்டிறம் எத்தன்மைத்து?

அன்றியும் அருணகிரிநாத சுவாமிகள், ஸ்ரீ முருகப் பெருமானுர்க் குகந்ததோர் செஞ்சொல் தோத்திரமாகி, மதுரம் முதிர்ந்து தேன்மழையோ எனச் சந்தச் சுவை வாய்ந்தும் படிப்போரையுங் கேட்போரையும் பரவசப்படுத்திப் பேரானந்தத்தி லாழ்த்துவதுமன்றி எளிதில் முத்தியைப் பயந்து கௌமார சமயிகட்குச் சிறப்பாகவும், ஏனையோர்க்கும் பொதுமறையாகவும் மிளிர்வதான திருப்புகழில் விருப்பமொடு மேற்கண்ட செய்தியைத் திருவாய் மலர்ந்தருளியனவற்றில் சிறிதே ஈண்டு எடுத்துக் காட்டுதும்.

"புகலிவனப் பேறப்புகல்
மதுரைமன் வெப்பாறத்திகழ்
பொடிகொடு புற்பாய்சுற்றிகள் கழுவேறப்
பொருது கர்த்தா!"—பழநி - ௧௪௨

"சமண்மூகர், பண்பறு பீலியோடு வெங்கழு வேறவோது
பண்டித ஞானநீறு தருவோனே!"—குன்றுதோறாடல் - ௨௯௦

"சிறியகர பங்கயத்து நீறொரு
தினையளவு சென்றுபட்ட போதினில்
தெளியவுடன் வென்றிவிட்ட மோழைகள்
கழுவேற, மகிதல மணைந்த அத்த!"—பழநி - ௧௫௯

"பாண்டவர் தேர்கடவும் நீண்டபிரான்மருக
பாண்டியன் நீறணிய மொழிவோனே"—திருவேங்கடம் - ௨௪௫

"அருகர் கணங்கள் பிணங்கிடும்படி
மதுரையில் வெண்பொடியும் பரந்திட
அரகர சங்கர வென்று வென்றருள் புகழ்வேலா"

"மதுரையின் மீதாலவாயினில், எதிரமணரொணுயிர
மறிகழு மீதேற நீறுப ரந்து லாவச்
செழியனு மாளாக வாது செய், கவிமத சீகாழி மாமுனி"

"மதுரை நாட்டிலே வாழ்வாகிய, அருகர் வாக்கினிலே
சார்வாகிய வழுதிமேற்றிரு நீறேபூசி நிமிர்ந்து கூனும் [வே"
நீறுலாகிய மகிமையாற்சமண் வேரோடேகெட வென்றகோ
—வேலூர் - 596.

"மீனக் கொடியோ னுடல்தன்று, தீமைப் பிணியாயின,
தீரவுவந்த வரநாதா"—சீர்காழி 776.

"தியாரக்கழு வேறிட நீறிடு
கையா வற்புதனே பிரமாபுர
செய் காழிப்பதி வாழ்முருகாசுரர் பெருமாளே"—ஷை 776.

எனவும் இன்னும், 783, 835, 865, 883, 1193-ம் திருப்புகழ் பாடல்களின்கண் பரக்கக் காணலாகும்.

திருநீறு இடும் இடங்களின் அதிதேவதைகளைச் சற்றே விளக்குதும்.

| இடம் | அதிதேய்வம் |
|---|---|
| உச்சி | சதாசிவன் |
| நெற்றி | மகேசன் |
| மார்பு | உருத்திரன் |
| நாபி | விஷ்ணு |
| வலமுழந்தாள் | பிரமன் |
| இடமுழந்தாள் | வாமை |
| வலத்தோள் | சேட்டை |
| இடத்தோள் | இரௌத்திரி |
| வலமுழங்கை | காளி |
| இடமுழங்கை | கலவிகரணி |
| வலதுமணிக்கட்டு | பலவிகரணி |
| இடதுமணிக்கட்டு | பலப்ரதமனி |
| வலதுவிலா | சர்வபூததமனி |
| இடதுவிலா | ஷை |



| இடம் | அதிதேய்வம் |
|---|---|
| முதுகு | சர்வபூததமனி |
| கழுத்து | மனோன்மணி |

அவ்வத் தானங்களில் விபூதி தரித்தலால் அவற்றிற்குரிய தேவதைகள் மகிழ்ந்து சிவஞானத்தைப் பாலிக்கும் என்பது தெற்றென விளங்கும்.

(தொடரும்)

# முதல்வனது அறக்கருணையும் மறக்கருணையும்

[சிதம்பரம், தமிழ்ப் பண்டிதர் - அ. முத்தையா முதலியார்]

(மலர் - ௮. இதழ் - ௮. ௩௩௮-ம் பக்கத் தொடர்ச்சி)

போகபூமியினிற் போகதனுவினுற் பொருந்த லாகா(து)
ஏகமாமின்ப சித்தியி யம்புறிற் கர்மபூமி
ஆகமானது கொண்டன் றியாதலான் ஞாலத்தெய்தி
யோகமா நெறியினின் றேருண்மை சாதித்துக்கொள்வர்.

இனி, ஜீவர்கள் மண்ணிற் பிறந்து சரியை, கிரியை, யோகம் முடித்து, ஞானமடைந்து, இருவினையொப்பு மலபரிபாகம் வந்து, இன்பம் மருவுவது எக்காலம்? அஃது, அவர்களால் ஆகுமாவெனின் ஆவது அரிதுதான். ஆதற்கு இறைவன் கிருபை வேண்டியதாயிருக்கிறது. அதற்கு அவன் கிருபை உடையவனாயிருந்தாலன்றி அவன் கிருபையை ஜீவர்கள் அடையமுடியாது. அவனே ஜீவர்கட்குக் கருணைசெய்யும் முறைமையை அடியில் வரும் கந்தர் கலிவெண்பாவின் அடிகள் சித்தாந்தக் கருத்துப்படி மிகத் தெளிவாய்க் கூறுகின்றன. பார்த்தறிக.

கந்தர் கலிவெண்பாவின் அடிகள் வருமாறு :—

மோகமுறும் பல்லுயிர்க்கு முத்தியளித்தற்குமல
பாகமுறவே கடைக்கண்பாலித்துத்—தேகமுறத்

தந்தவருவுருவஞ் சார்ந்தவிந்து மோகினிமான்
பெந்தமுறவே பிணிப்பித்து—மந்த்ரமுதல்
ஆறத்துவாவு மண்டத்தார்ந்தவத்து வாக்களுமுற்
கூறத்தகுஞ் சிமிழ்ப்பிற் கூட்டுவித்து—மாறிவரும்
ஈரிரண்டு தோற்றத்தெழுபிறப்புள் யோனியெண்பான்
ஆரவந்த நான்குநூறாயிரத்துட் டீர்வரிய
கன்மத்துக் கீடாய்க் கறங்குஞ்ச கடம்போல்
சென்மித்துழலத்திரோதித்து—வெந்நிரய
சொர்க்காதிபோக மெலாந்துய்ப்பித்துப் பக்குவத்தால்
நற்காரணஞ்சிறிது நண்ணுதலும்—தர்க்கமிடும்
தொன்னூற் பரசமயந்தோறு மதுவதுவே
நன்னூலெனத் தெரிந்து நாட்டுவித்து—முன்னூல்
விரதமுதலாய பல மெய்த்தவத்தினுண்மைச்
சரியைகிரியை யாயோகஞ் சார்வித்தருள் பெருகு
சாலோகசாமீ பசாரூபமும் புசிப்பித்(து)
ஆலோகந்தன்னையகற்று வித்து—நால்வகையாம்
சத்திநிபாதந்தருதற் கிருவினையும்
ஒத்துவருங்கால முளவாகிப் பெத்த
மலபரிபாகம் வருமளவிற்பன்னாள்
அலமருதல் கண்ணுற்றருளி—உலவா(து)
அறிவுக்கறிவாகிய வ்வறிவுக் கெட்டா
நெறியிற் சிறந்தநிலைநீங்கிப்—பிறியாக்
கருணைதிருவுருவாய்க்கா சினிக்கே தோன்றிக்
குருபரனென்றோர் திருப்பேர்கொண்டு—திருநோக்கால்
ஊழ்வினையைப் போக்கி யுடலறுபத்தெட்டுநில(ம்)
எழுமத்து வாக்களிரு மூன்றும் பாழாக
ஆணவமானபடலங் கிழித்தறிவிற்
காணரிய மெய்ஞ் ஞானக்கண்காட்டிப்—பூணும்
அடிஞானத்தாற் பொருளுமான் மாவுங்காட்டிக்
கடியார்புவனமுற்றுங் காட்டி—முடியாது
தேக்குபரமானந்தத் தெள்ளமுதாகியெங்கும்
நீக்கமற நின்ற நிலைகாட்டிப்—போக்கும்



வரவும் நினைப்பும் மறப்பும் பகலும்
இரவுங்கடந்துல வாவின்பம் மருவுவித்து.

[மோகமுறும் பல்லுயிரென்றது சகலரை]

மேலே, பாவானது தெரிவித்தபடி ஜீவர்கள் மாட்டு இறைவனுக்குக் கருணையிருந்தும், ஜீவர்களெல்லாம் ஒரு படித்தாக இறைவன் கருணையைப் பெற்று உய்வதில்லை. மேலே கூறியபடி ஜீவர்களில், சன்மார்க்கர், துன்மார்க்கர் பன்மார்க்கரெனப் பல்வகைப்பட்டு நல்லனவும், தீயனவும், கலப்புடையனவும் புரிகிறார்கள். அதனால் சன்மார்க்கர்கட்குப் பரமன் கருணை ஒருவிதமாகவும், துன்மார்க்கட்குப் பரமன் கருணை ஒருவிதமாகவும் செல்கிறது. அதனால் இறைவன் கருணை இருவிதப்பட்டு அறக்கருணை யெனவும், மறக்கருணை யெனவும் வழங்குவதாகின்றது. இதனால், இறைவன் பாரபக்ஷம் உடையவனென்றாவது, வன்கண்ணனென்றாவது சொல்ல ஒரு சிறிதும் வாய்க்காது. அரசன், தன்கீழ் வாழும் குடிகளில் நல்லவர்களை ஆதரித்தலும், தீயவர்களைத் தீயவொழுக்கம் நீங்கத் தண்டித்தலும், தாய்தந்தையர் நற்புத்திரனைப் பாராட்டுதலும், தீயபுத்திரனைச் சன்மார்க்கத்தில் நிறுத்த ஒறுத்தலும், 'உபாத்தியாயன் நன்மாணவனைத் தண்டியாது விடுதலும், தீய மாணவனைத் தண்டஞ்செய்து திருத்தலும் கண்கூடாகப் பார்க்கிறோம். இவர்கள் முறையே குடிகளிடத்தும், புத்திரர்களிடத்தும், மாணவர்களிடத்தும் காட்டும் கருணைபேதத்தால், இவர்களைப்பாராபக்ஷம் உடையவரென்றாவது, வன்கண்ணரென்றாவது சொல்ல முடியுமா? முடியாது. இவ்வாறே இறைவனும் சன்மார்க்கர், துன்மார்க்கர்களுக்குச் செய்யவேண்டியது தானே. தண்டியாதுவிடின் துன்மார்க்கர்கள் திருந்துவதெப்படி? ஆகையினாலே, இறைவன் கருணை இருவிதமாயிருப்பது முறையிலும் முறையே. நிற்க. இறைவன் அறக்கருணை, மறக்கருணை செலுத்தியதைப் பார்த்தறிவோம். சூரபத்மனாதியர் செய்த கொடுமையால் வாடிய தேவர்கள், இறைவனிடம் சென்று தங்கள் குறையைச் சொல்லியபோது, அவ்விறைவன் குமாரக் கடவுளாய்த் தோன்றித் தேவர்களைக் காத்தருளினமை அறக்கருணை

யெனவும், அக்குமாரக் கடவுள் படையெடுத்துச் சென்று சூரபத்மன் தன்கிளையொடும் மாளப் பொருதபோது சூரபத்மன் மயிலாகவும், கோழியாகவும் உருவெடுத்துவர, மயிலை வாகனமாகவும், கோழியைக் கொடியாகவும் கொண்டருளினமை மறக்கருணை யெனவும் பர்வதராசன் அம்பிகை மகளாகவும், பரமன் மருமகனாகவும் வேண்டித் தவஞ்செய்த தற்கிணங்க அருளினமை அறக்கருணை யெனவும் தக்கன் (பரனை) மதியாது யாகஞ் செய்த காலத்து அந்த யாகத்தையும் அதற்கு வந்திருந்த சகல தேவர்களையும் சின்னாபின்னப் படுத்தித் தக்கனுக்கு ஆட்டுத் தலைபொருத்தி அறிவுவரச் செய்தருளினமை மறக்கருணை யெனவும் சொல்லப்பெறும். இப்படிப் பரமன் ஜீவர்களை அறக்கருணை, மறக்கருணை காட்டி ஆட்கொண்டருளினமை எல்லையற்றதாகும். அவற்றை யெல்லாம் வேதாகம இதிகாச புராணங்களிலே பரக்கக் காணலாம். இதுவரை எழுதி வந்ததில் அறக்கருணையென்பது சன்மார்க்கர்கட்கு யாதொரு துன்பமும் நேராமல் பாதுகாத்தருளுவதென்றும், மறக்கருணை யென்பது துன்மார்க்கர்கட்கு அவர்கள் செய்யும் தீய தொழில்களெல்லாம் கெட்டவையென் றவர்களறியத் தண்டித் தருளுவதென்றும் வெளிப்படும். இவ்வாறு, நல்லார்க்கும், பொல்லார்க்கும் பரமன் கருணை செலுத்தி அவர்களை யாட்கொள்ளுகையினாலே, ஆன்றோர்களெல்லாம் பரமனை, கருணாகரக் கடவுளென்றும், கருணைமலை யென்றும், கருணாநிதி யென்றும், கருணைவாரிதியென்றும் பலபடப் புகழ்ந்தோதுவாராயினர்.

# சைவத் தேர்வு அறிக்கை

இளஞ்சைவப் புலவர், சைவப் புலவர் என்ற இரண்டு தேர்வுகட்கும் விண்ணப்பம் செய்யும் தேதி 20-9-35 வரை நீடிக்கப்பெற்றுளது. சைவ இளைஞர்கள் உடனே விண்ணப்பம் செய்க. கட்டணம் ரூபா ஒன்றே.

௨

# கல்லாடத்திலுள்ள திருவிளையாடற் பகுதிகள்

[ஒவ்வொரு பகுதியி னீற்றிலும் பிறைக் குறிகளிற் கொடுக்கப் பட்டுள்ள எண்கள் கல்லாடத்துச் செய்யுளெண்களைக் குறிப்பன.]

1. **பொ**ன்னகர்க் கூடற் சென்னியம் பிறையோன்
பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினைக்
கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப்
பொற்குவை தருமிக் கற்புட னுதவி
என்னுளங் குடிகொண் டிரும்பய னளிக்கும்
கள்ளவிழ் குழல்சேர் கருணையெம் பெருமான். (3)

2. பெருநீர் வையை வளைநீர்க் கூடல்
உடலுயி ரென்ன வுறைதரு நாயகன்
கடுக்கைமலர் மாற்றி வேப்பலர் சூடி
மையவாய்க் காப்புவிட் டணிபூ ணணிந்து
விரிசடை மறைத்து மணிமுடி கவித்து
விடைக்கொடி நிறுத்திக் கயற்கொடி யெடுத்து
வழுதி யாகி முழுதுல களிக்கும்
பேரரு ளாயகன் . . (4)

3. உலகிய னிறுத்தும் பொருண்மர பொடுங்க
மாறனும் புலவரு மயங்குறு காலை
முந்துறும் பெருமறை முளைத்தருள் வாக்கால்
அன்பினைந் திணையென் றறுபது சூத்திரங்
கடலமு தெடுத்துக் கரையில்வைத் ததுபோற்
பரப்பின் றமிழ்ச்சுவை திரட்டிமற் றவர்க்குத்
தெளிதரக் கொடுத்த தென்றமிழ்க் கடவுள். (5)

4. கூடற் பெருமான் பொதியப் பொருப்பகத்
தருவியஞ் சாரல் . . . (6)

5. கூடன் மாநக ராட வெடுத்த
விரித்த தாமரை குவித்த தாளோன். (7)

6. மணிவேற் குமரன் முதனிலை வாழுங்
குன்றுடுத் தோங்கிய கூடலம் பதியோன். (8)

7. குளிர்கொண் டுறையுந் தெளிநீர் வாவியை
வள்ளைசெங் கமலங் கள்ளவி ழாம்பற்
பாசடை மறைக்குங் கூடற் பெருமான். (9)

8. குன்ற முடுத்த கூடலம் பதியிறை
தொடர்ந்துயிர் வவ்விய விடங்கெழு மிடற்றோன்
புண்ணியந் தழைத்த முன்னோர் நாளில்
இருவிர னிமிர்த்துப் புரிவொடு சேர்த்துக்
குழையுடற் றலைவிரி கைத்திரி கறங்க
ஒருவிரற் றெறித்து மைவிரற் குவித்தும்
பெருவா யொருமுகப் படகம் பெருக்கத்
தடாவுட லும்பர்த் தலைபெறு முழவ
நான்முகந் தட்டி நடுமுக முரப்ப
ஒருவாய் திறந்துட் கடிப்புடல் விசித்த
சல்லரி யங்கைத் தலைவிரற் றாக்கக்
கயந்தலை யடியெனக் கயிறமை கைத்திரி
இருவிர லுயர்த்திச் செருநிலை யிரட்ட
இருதலை குவிந்த நெட்டுடற் றண்ணுமை
ஒருமுகந் தாழ்த்தி யிருகடிப் பொலிப்பத்
திருமல ரெழுதிய வரையிரு பத்தைந்
தங்குலி யிரண்டிரண் டணைத்துவிளர் நிறீஇ
மும்முகக் கயலுடன் மயிர்க்கயிறு விசித்த



கல்ல வடத்திரள் விரற்றலை கறங்க
மரக்கா லன்ன வொருவாய்க் கோதை
முகத்தினுந் தட்ட மூக்கினுந் தாக்க
நாடிரு முனிவர்க் காடிய பெருமான். (10)

9. மீனுங் கொடியும் விரிதிணை யைந்துந்
தேனுறை தமிழுந் திருவுறை கூடலு
மணத்தலின் மதிக்குல மன்னவ னாகியும்
நவமணி யெடுத்து நற்புலங் காட்டலின்
வளர்குறி மயங்கா வணிக னாகியும்
விழைதரு முழவும் வித்து நாறுந்
தழைதலின் வேளாண் டலைவ னாகியும்
விரிதிரை வையைத் திருநதி சூழ்ந்த
மதுரையம் பதிநிறை மைம்மலர்க் களத்தன். (11)

10. பனிக்கதிர்க் குலவன் பயந்தருள் பாவையைத்
திருப்பெரு வதுவை பொருந்திய வந்நாட்
சொன்றிப் பெருமலை தின்றுநனி தொலைத்த
காருடற் சிறுநகைக் குறுந்தாட் பாரிடம்
ஆற்றா தலந்த நீர்நசை யடக்க
மறிதிரைப் பெருநதி வரவழைத் தருளிய
கூடலம் பதியுறை குணப்பெருங் கடவுள். (12)

11. பரிபுரக் கம்பலை யிருசெவி யுண்ணும்
குடக்கோச் சேரன் கிடைத்திது காண்கென
மதிமலி புரிசைத் திருமுகங் கூறி
அன்புருத் தரித்த வின்பிசைப் பாணன்
பெறநிதி கொடுக்கென வுறவிடுத் தருளிய
மாதவர் வழுத்துங் கூடற் கிறைவன். (13)

12. முலைமுன் றணந்த சிறுநுதற் றிருவினை
அருமறை விதிக்கத் திருமணம் புணர்ந்து

மதிக்குலம் வாய்த்த மன்னவ னாகி
மேதினி புரக்கும் விதியுடை நன்னாள்
நடுவூர் நகர்செய் தடுபவந் துடைக்கும்
அருட்குறி நிறுத்தி யருச்சனை செய்த
தேவ நாயகன் கூடல்வா ழிறைவன். (14)

13. சமயக் கணக்கர் மதிவழி கூறா
துலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்
மாதுடன் றோன்றிக் கூடலு ணிறைந்தோன். (15)

14. முன்னொரு காலத் தடுகொலைக் கணைந்த
முகிலுருப் பெறுமோர் கொடுமரக் கிராதன்
அருமறைத் தாபத னமைத்திடு செம்மலர்
செருப்புடைத் தாளால் விருப்புடன் றள்ளி
வாயெனுங் குடத்தில் வரம்பற வெடுத்த
அமுதங் கடத்தள்ளு மணிநீ ராட்டிப்
பின்னல்விட் டமைத்ததன் றலைமல ரிணைஇத்
தருமலர் விண்புக மணிமுடி நிறைத்து
வெள்வாய் குதட்டிய விழுதுடைக் கருந்தடி
வைத்தமை யாமுன் மகிழ்ந்துண வுண்டவன்
மிச்சிலுக் கின்னு மிச்சைசெய் பெருமான். (16)

15. நெடுஞ்சடைக் கிடந்த குறும்பிறைக் கொழுந்துங்
கருமுகில் வெளுத்த திருமிடற் றிருளும்
நுதன்மதி கிழித்த தழலவிர் நோக்கமு
மறைத்தொரு சிறுகுடிப் பாதவ னாகிப்
பொன்றலைப் புணர்வலை கொடுங்கர மாக்கி
நெடுங்கடல் கலக்கு மொருமீன் படுத்த
நிறையரு ளுயக னுறைதரு கூடல். (17)



16. ஒருபாற் பசுங்கொடி திருநுதல் பொடித்த
குறுவெயர்ப் பொழுக்கெனப் பிறையமு தொடுக்கப்
படிறர் சொல்லெனக் கடுநெஞ் சிறைப்ப
அண்டப் பொற்சுவர் கொண்ட வழுக்கை
யிறைத்துக் கழுவுவ தென்னக் கங்கைத்
துறைகொ ளாயிர முகமுஞ் சுழல
அப்பெருங் கங்கை கக்கிய திரையெனக்
கொக்கின் றூவ லப்புற மாக
மாணிக் கத்தின் வளைத்த சுவரெனப்
பாணிக் குட்பெய் செந்தழல் பரப்பத்
தன்னாற் படைத்த பொன்னணி யண்டம்
எண்டிக் களந்து கொண்டன வென்னப்
புரிந்த செஞ்சடை நிமிர்ந்து சுழல
மேருவின் முடிசூழ் சூரிய ராகத்
தயங்கிய மூன்றுகண் ணெங்கணு மாகக்
கூடன் மாநக ராடிய வமுதை
உண்டு களித்த தொண்டர்க ளென்ன. (18)

17. கார்வான் றந்த பேர்கொள் செக்கரில்
வீதிவாய்த் தென்றன் மெல்லென் றியங்கு
மூதூர்க் கூடல் வந்தருண் முக்கணன். (19)

18. முனிவ ரேமுற வெள்ளியம் பொதுவின்
மனமுங் கண்ணுங் களியக் குனிக்கும்
புதிய நாயகன் பழமறைத் தலைவன். (20)

19. பாற்கட லுறங்கு மாயவன் போலத்
தவள மாடத் தகன்முதுகு பற்றி
நெடுங்கார் கிடந்து படும்புனல் பிழியுங்
கூடல்வீற் றிருந்த நாடகக் கடவுள். (21)

20. தண்மதி கடுஞ்சுடர் வெவ்வழல் கண்வைத்
தளவாப் பாத மண்பரப் பாகத்
தனிநெடு விசும்பு திருவுட லாக
விருந்திசைப் போக்குப் பெருந்தோ ளாக
வழுவறு திருமறை யோசைக ளனைத்து
மொழிதர நிகழும் வார்த்தை யாக
உண்ணிறைந் துழலும் பாடிரண் டுயிர்ப்புப்
பகலிர வொடுங்கா விடுவளி யாக
அடுபடைப் பூழியன் கடுமுரண் பற்றி
இட்டவெங் கொடுஞ்சிறைப் பட்ட கார்க்குலந்
தளையொடு நிறைநீர் விடுவன போல. (22)

21. நெடுமலை பெற்ற வொருமகள் காண
நான்முக விதியே தாளந் தாக்க
வந்தநான் முகனை யுந்தி பூத்தோன்
விசித்துமிறை பாசத் திடக்கை யிசைப்ப
மூன்றுபுரத் தொன்றி லரசுடை வாணன்
மேருக் கிளைத்த தோளா யிரத்தொடும்
எழுகடல் கிளர்ந்த திரள்கலி யடங்க
முகம்வே றிசைக்குங் குடமுழ விரட்டப்
புட்காற் றும்புரு மணக்கந் திருவர்
நான்மறைப் பயனு மேழிசை யமைத்துச்
சருக்கரைக் குன்றிற் றேன்மழை நான்றென
ஏழு முனிவர்க டாழு மாதவர்
அன்பின ருள்ளமோ டென்புகரைந் துருக
விரனுன் கமைத்த வணிகுரல் வீங்காது
நான்மறை துள்ளும் வாய்பிள வாது
காட்டியுள் ளுணர்த்து கோக்கமா டாது



பிதிர்க னன்மணி சூழ்முடி நடுங்காது
வயிறுகுழி வாங்கி யழுமுகங் காட்டாது
நாசி காகுளி வெடிகுரல் வெள்ளை
பேசாக் கீழிசை யொருபுற மொட்ட
கெட்டுயிர்ப் பெறித லெறிந்துநின் றிரட்டல்
ஓசை யிழத்தல் கழிபோக் கென்னப்
பேசுறு குற்ற மசையொடு மாற்றி
வண்டின் றுரியுங் கஞ்ச நாதமுஞ்
சிரல்வா னிலையுங் கழையிலை வீழ்வதும்
அருவி யோசையு முழவின் முழக்கமும்
வலம்புரிச் சத்தமும் வெருகின் புணர்ச்சியும்
இன்னுமென் றிசைப்பப் பன்னிய விதியொடு
மந்தர மத்திமை தாரமிவை மூன்றில்
துள்ளல் தூங்கல் தெள்ளிதின் மெலிதல்
கூடிய கான மன்பொடு பரவப்
பூதந் துள்ளப் பேய்கை மறிப்ப
எங்குள வுயிரு மின்பநிறைந் தாட
நாடக விதியோ டாடிய பெருமான்
மதுரை மாநகர்ச் செழிய னாகிக்
கதிர்முடி கவித்த விறைவன் (23)

22. பன்மலர்ச் சோலை விம்மிய பெருமலர்
இமையோர் புரத்தை நிறைமணங் காட்டுங்
கூடலம் பதியகம் பீடுபெற விருந்தோன். (24)

23. பஞ்சவ னிறைந்த வன்புடன் வேண்ட
மாறிக் குனித்த நீறணி பெருமாற்
கமுத போனகங் கதுமென வுதவும்
அடுந்தீ மாறு மடைப்பள்ளி யாகி
இன்னும் பலவாய் மன்னுங் கடலே. (25)

24. . . . கூடல்
நிறைந்துறை முக்கட் பெருந்திற லடிகள். (26)

25. சுந்தரக் கடவுள் கந்தரக் கறையோன்
மாமி யாடப் புணரி யழைத்த
காமரு கூடற் கிறைவன் கழலிணை. (27)

26. உடற்புலவு மாற்றும் படத்திரை வையை
நிறைநீர் வளைக்கும் புகழ்நீர்க் கூடல்
வெள்ளியம் பொதுவிற் கள்ளவிழ் குழலொடும்
இன்பநடம் புரியுந் தேவ நாயகன். (28)

27. எரிதழற் குஞ்சிப் பொறிவிழிப் பிறழெயிற்
றிருளுடை லந்தகன் மருள்கொள வுதைத்த
மூவாத் திருப்பதத் தொருதனிப் பெருமான்
எண்ணிற் பெறாத வண்டப் பெருந்திரள்
அடைவின் றளித்த பிறைநுதற் கன்னியொடும்
அளவாக் கற்ப மளிவைத்து நிலேஇய
. . . கூடற் பெருவளம் பதியே. (29)

28. அமுதயில் வாழ்க்கைத் தேவர்கோ னிழிச்சிய
மதமலை யிருநான்கு பிடர்சுமந் தோங்கிச்
செம்பொன் மணி குயிற்றிய சிகரக் கோயிலுள்
அமையாத் தண்ணளி யுமையுட னிறைந்த
ஆலவா யுறைதரு மூலக் கொழுஞ்சுடர். (30)

29. கல்விப மதனைக் கரும்புகொள வைத்த
ஆலவா யமர்ந்த நீலநிறை கண்டன். (31)

30. நான்கெயிற் றொருத்தற் பிடர்ப்பொலி வரைப்பகை
அறுகால் குளிக்கு மதத்தொடை யேந்த
முட்டாட் செம்மலர் நான்முகத் தொருவன்
எண்ணிநெய் யிறைத்து மணவழ லோம்பப்



புவியளந் துண்ட திருநெடு மாலோன்
இருகர மடுக்கிப் பெறுநீர் வார்ப்ப
ஒற்றை யாழியன் முயலுடற் றண்சுடர்
அண்டம் விளர்ப்பப் பெருவிளக் கெடுப்ப
அளவாப் புலன்கொள விஞ்சைய ரெண்மரும்
வள்ளையிற் கருவியிற் பெரும்புகழ் விளைப்ப
முனிவர் செங்கரஞ் சென்னி யாக்க
உருப்பசி முதலோர் முன்வாழ்த் தெடுப்ப
மும்முலை யொருத்தியை மணந்துல காண்ட
கூடற் கிறைவன். . . (32)

31. . . . தனிமுதற்
றிருமா மதுரை . . (33)

32. முன்னொரு நாளி னற்படை யுடன்று
செழிய னடைத்த சென்னி பாட
எள்ளருங் கருணையி னள்ளிரு ணடுநாள்
அவனெனத் தோன்றி யருஞ்சிறை விடுத்த
முன்னவன் கூடன் மூதூர் . (34)

33. அருணடம் புரிந்த தேவர் நாயகன்
ஒருநாண் மூன்று புரந்தீக் கொளுவப்
பொன்மலை பிடுங்கிக் கார்முக மென்ன
வளைத்த ஞான்று நெடுவிண் டடையக்
கால்கொடுத் தன்ன கந்திக ளிமிர்ந்து
நெருக்குபொழிற் கூடல் . . (35)

34. வற்றிய நரம்பி னெடுங்குரற் பேழ்வாய்க்
குழிவிழிப் பிறழ்பற் றெற்றற் கருங்காற்
றுளிப் போந்தின் றருமயிர்ப் பெருந்தலை
விண்புடைத் தப்புறம் விளங்குடற் குணங்கினங்

கானம் பாடிச் சுற்றிநின் றாடச்
சுழல்விழிச் சிறுநகைக் குடவயிற் றிருகுழைச்
சங்கக் குறுந்தாட் பாரிடங் குனிப்பத்
தேவர்கண் பனிப்ப முனிவர்வாய் குழறக்
கல்ல வடத்திரண் மணிவாய்த் தண்ணுமை
மொந்தைகல் லலசு துத்திரி யேங்கக்
கட்செவி சுழலத் தாழ்சடை நெறிப்ப
இதழிதா துதிர்ப்பப் பிறையமு துகுக்க
வெள்ளியம் பலத்துட் டுள்ளிய பெருமான். (36)

35. காருடற் பிறையெயிற் றரக்கனைக் கொன்று
வச்சிரத் தடக்கை வரைப்பகை சுமந்த
பழவுடற் காட்டுந் தீராப் பெரும்பழி
பனிமலை பயந்த மாதுடன் றீர்த்தருள்
பெம்மான் வாழும் பெருநகர்க் கூடல். (37)

36. நீங்காப் பழனப் பெருநகர்க் கூடற்
கரமான் றரித்த பெருமா னிறைவன். (38)

37. கருமுகிற் கணிநிறத் தழற்கட் பிறையெயிற்
றரிதரு குட்டி யாயபன் னிரண்டினைச்
செங்கோன் முளையிட் டருணீர் தேக்கிக்
கொலைகள வென்னும் படர்களை கட்டுத்
திக்குப்பட ராணை வேலி கோலித்
தருமப் பெரும்பயி ருலகுபெற விளைக்கும்
நாற்படை வன்னிய ராக்கிய பெருமான். (39)

38. தோளு மிசையுங் கூறிடுங் கலையும்
அருட்டிரு வெழுத்தும் பொருட்டிரு மறையும்
விரும்பிய குணமு மருந்திரு வுருவு
முதலெண் கிளவியும் விதமுட னிரையே



எட்டு மேழுஞ் சொற்றன வாறும்
ஐந்து நான்கு மணிதரு மூன்றுந்
துஞ்சலி லிரண்டுஞ் சொல்லரு மொன்றும்
ஆருயிர் வாழ வருள்வா நிறுத்திய
பேரருட் கூடற் பெரும்பதி நிறைந்த
முக்கட் கடவுள் . . (40)

39. பலகுறி பெற்றிவ் வுலகுயி ரளித்த
பஞ்சின் மெல்லடிப் பாவைகூ றாகிக்
கருங்குரு விக்குக் கண்ணருள் கொடுத்த
வெண்டிரு நீற்றுச் செக்கர் மேனியன்

. . .

புண்ணியக் கூட லுண்ணிறை பெருமான். (41)

40. தழல்விழிப் பேழ்வாய்த் தரக்கின் றுளிமுலை
பைங்கட் புல்வாய் பாலுணக் கண்ட
அருணிறை பெருமா னிருணிறை மிடற்றோன். (42)

41. வீதி குத்திய குறுந்தாட் பாரிடம்
விண்டலை யுடைத்துப் பிறைவாய் வைப்பக்
குணங்கினந் துள்ளக் கூளியுங் கொட்ப
மத்தி யந்தணன் வரஞ்சொலி விடுப்பத்
தில்லை கண்ட புலிக்கான் முனிவனுஞ்
சூலை கைவிடப் பதஞ்சலி யாகிய
ஆயிரம் பணாடவி யருந்தவத் தொருவனுங்
கண்ணால் வாங்கி நெஞ்சறை நிறைப்பத்
திருநட நவின்ற வுலகுயிர்ப் பெருமான்

. . .

அளவா வூழி மெய்யொடு சூழ்ந்து
நின்றுநின் றோங்கி நிலையறம் பெருக்கும்

ஆனாப் பெரும்புக ழருணகர்க் கூடற்
பெண்ணுடல் பெற்ற சென்னியம் பிறையோன். (43)

42. முரன்றெழு கான முயன்றுவா தியைந்த
வடபுல விஞ்சையன் வைகிடத் தகன்கடைத்
தென்றிசைப் பாண னடிமை யானெனப்
போகா விறகுடன் றலைக்கடை பொருந்தி
உந்தித் தோற்ற மோசைநின் றொடுங்கப்
பாலையி லெழுப்பி யமரிசை பயிற்றித்
தூங்கலுந் துள்ள லுஞ் சுண்டிநின் றெழுதலுந்
தாரியிற் காட்டித் தருஞ்சா தாரி
உலகுயி ருள்ளமு மொன்றுபட் டொடுங்க
இசைவிதி பாடிய விசைப்பகை துரந்த
கூடற் கிறையோன் . . (44)

43. முன்னொரு வணிகன் மகப்பே றின்மையின்
மருமான் றன்னை மகவெனச் சடங்குசெய்
துள்ளமுங் கரணமு மவனுழி யொருக்கி
முக்கவர்த் திருநதி துணையுடன் மூழ்கி
அப்புலத் துயிர்கொடுத் தருட்பொருள் கொண்டபின்
மற்றவன் றாயம் வவ்வுறு மாக்கள்
காணிகைக் கொண்ட மறுநிலை மைந்தனை
நிரைத்துக் கிளைகொ ணெடுவழக் குய்த்தலும்
மைந்தனுங் கேளிரு மதிமுடிக் கடவுணின்
புந்தியொன் றன்றிப் புகலில னென்றயர்
அவ்வுழி யொருசா ரவன்மா துலனென
அறிவொளி நிறைவே யோருருத் தரித்தவந்
தருள்வழக் கேறி யவர்வழக் குடைத்த
கூட னாயகன் . . (45)



44. இதழியுந் தும்பையு மதியமுங் கரந்து
வளவிலை மாக்கள் வடிவெடுத் தருளி
முத்தமிழ் நான்மறை முளைத்தருள் வாக்கால்
வீதி கூறி விதித்தமுன் வரத்தாற்
கருமுகில் விளர்ப்ப வறனீர் குளிப்பக்
கண்புதை யாப்புத் திணியிருள் விடிய
உடன்றுறும் பிணித்த பாவமும் புலக்
கண்டநீள் கதுப்பினர் கைகுவி பிடித்துக்
குருகணி செறித்த தனிமுத னாயகன். (46)

45. குரவரும் புடுத்த வாலெயிற் றழல்விழிப்
பகுவாய்ப் பாம்பு முடங்க லாக
ஆலவாய் பொதிந்த மதிமுடித் தனிமுதல். (47)

46. மள்ளற் பழனத் தணிநீர்க் கூடல்
நீங்கா துறையு நிமிர்சடைப் பெருமான்
உரகன்வாய் கீண்ட யாதவன் போல
மண்ணகழ்ந் தெடுத்து வருபுனல் வையைக்
கூலஞ் சுமக்கக் கொட்டா ளாகி
நரைத்தலை முதியோ ளிடித்தடு கூலிகொண்
டடைப்பது போல வுடைப்பது நோக்கிக்
கோமக னடிக்க வவனடி வாங்கி
எவ்வுயி ரெவ்வுல கெத்துறைக் கெல்லாம்
அவ்வடி கொடுத்த வருணிறை நாயகன். (48)

47. அறப்பெருங் கூடற் பிறைச்சடைப் பெருமான். (49)

48. ஒருதனி யடியாற் குதவுதல் வேண்டி
மண்ணவர் காண வட்டணை வாளெடுத்
தாதி சாரணை யடர்நிலைப் பார்வை
வாளுட னெருக்கன் மார்பொடு முனைதல் .

பற்றிநின் றடர்த்த வுட்கையின் முறித்தல்
ஆநநத் தொட்ட லணிமயிற் புரோகம்
உட்கலந் தெடுத்த லொசிந்திட மழைத்தல்
கையொடு கட்டல் கடிந்துள் ளழைத்தலென்
றிவ்வகைப் பிறவு மெதிரம ரேறி
அவன்பகை முறித்த வருட்பெருங் கடவுள். (50)

49. மஞ்சடை சூழற்பெறு செஞ்சடைப் பெருமான்
அருந்தமிழ்க் கீரன் பெருந்தமிழ்ப் பனுவல்
வாவியிற் கேட்ட காவியங் களத்தினன். (51)

50. திருக்களங் கறுத்த வருட்பெறு நாயகன்
கூடல் . . (52)

51. விஞ்சைவந் தருளிய நஞ்சணி மிடற்றோன்
சந்தமும் பதமுஞ் சருக்கமு மடக்கமுஞ்
சின்னக் குறளுஞ் செழுங்கார் போலப்
பெருமறை முழங்குந் திருநகர்க் கூடல். (53)

52. . . பணிமுனி நால்வர்க்
கறமுத லொன்கும் பெறவருள் செய்த
கூடற் பெருமான் . . (54)

53. மதுமலர் பறித்துத் திருவடி நிறைத்த
நான்மறைப் பாலனை நலிந்துயிர் கவருங்
காலனைக் காய்ந்த காலினன் கூடல். (55)

54. படைநான் குடன்று பஞ்சவற் றுரந்து
மதுரை வவ்விய கருநடர் வேந்தன்
அருகர்ச் சார்ந்துநின் றரன்பணி யடைப்ப
மற்றவன் றன்னை நெடுந்துயில் வருத்தி
இறையவன் குலத்து முறையரின் மையினுற்
குருதித் தாரை கல்லொடு பிறங்க
.



மெய்யணி யளறுக் கைம்முழந் தேய்த்த
பேரன் புருவப் பசுக்கா வலனை
உலகினிற் றமது முக்குறி யாக
மணிமுடி வேணியு முருத்திரக் கலனும்
நிலவுமிழ் புண்ணியப் பானிறச் சாந்தமும்
அணிவித் தருள்கொடுத் தரச னாக்கி
அடுமா லகற்றி நெடுநாள் புரக்க
வையக மளித்த மணியொளிக் கடவுள். (56)

55. ஒருபரங் குன்ற மருவிய கூடற்
பெருநதிச் சடைமிசைச் சிறுமதி சூடிய
நாயகன் . . . (57)

56. பேரருள் கொடுத்த கூடலம் பதியோன். (59)

57. வடதிரு வால வாய்திரு நடுவூர்
வெள்ளி யம்பல நள்ளா றிந்திரை
பஞ்சவ னீச்சர மஞ்செழுத் தமைத்த
சென்னி மாபுரஞ் சேரன் றிருத்தளி
கன்னிசெங் கோட்டங் கரியோன் றிருவுறை
. . . .
அருவியஞ் சார லொருபரங் குன்றஞ்
சூழ்கொள விருந்த கூடலம் பெருமான். (60)

58. காற்படைக் கொடியினன் கருணையோ டமர்ந்த
புண்ணியக் குன்றம் புடைபொலி கூடற்
பிறைச்சடை முடியினன் . . (62)

59. கொலைமதின் மூன்று மிகலறக் கடந்து
பெருநில வெறித்த புகர்முகத் துளைக்கைப்
பொழிமதக் கறையடி யழிதரக் கடந்து
களவுத் தொழில்செ யரிமக னுடலந்

திருநுத ளேகக்த் தெரிபெறக் கடந்து
மாறுகொண் டறையு மதிநூற் கடல்கிளர்
சமயக் கணக்கர் தந்திறங் கடந்து
புலனொடு தியங்கும் பொய்யுளங் கடந்த
* * *
பொழினிறை கூடற் புதுமதிச் சடையோன். (63)

60. அருமறை விதியு முலகியல் வழக்குங்
கருத்துறை பொருளும் விதிப்பட நினைந்து
வடசொன் மயக்கமும் வருவன புணர்த்தி
ஐந்திணை வழுவா தகப்பொரு ளமுதினைக்
குறுமுனி தேறவும் பெறுமுதற் புலவர்கள்
ஏமெழு பெயருங் கோதறப் பருகவும்
புலனெறி வழக்கிற் புணருல கவர்க்கு
முற்றவம் பெருக்கு முதற்று பதர்க்கு
நின்றறிந் துணர்த்தவுந் தமிழ்ப்பெயர் நிறுத்தவும்
எடுத்துப் பரப்பிய விமையவர் நாயகன். (64)

61. . . பேருண் மேனியில்
திணையைந் தமைத்த விணையிலி நாயகன். (65)

62. . . குறுமுனிக் கருளுடன்...
செம்புடற் பொதிந்த தெய்வப் பொதியமும்
உவட்டா தமையா வுணர்வெனும் பசியெடுத்
துள்ளமுஞ் செவியு முருகிநின் றுண்ணும்
பெருந்தமி ழமுதும் பிரியாது கொடுத்த
தோடணி கடுக்கைக் கூடலெம் பெருமான். (66)

(தொடரும்)



நூலில்லையாயின் அந்தவுலகங்களின் செய்தியறிந்தபடியென், உனது அநுமானத்தாலறியும் பகுதியன்றே? ஆகையால், காட்சியானும் அநுமானத்தானும் அறியாதபொருளை அறிவிப்பது நூல்; அந்நூற்பிரமாணம் உனக்கில்லையென்று கூறின், நீ முன்சொன்ன பிடகநூற்பிரமாணமும் உனக்கில்லையாம். ௧௨

எப்பொருளும் அநித்தமென இயம்பிடுவை அநித்தம்
இல்லதற்கோ உள்ளதற்கோ உளதிலதா னதற்கோ, செப்பிடின்இல் லதற்கில்லை தென்று மில்லை சென்றடைவ துள்ளதற்கேல் உள்ளதென்று முண்டாம், அப்படிதான் உளதிலதாம்
அப்பொருளுக் கென்னில் உளதிலதா கா திலதும் உள்ள
தாகா, திப்பொருளுக் கநித்தமிலை என்றொன்றைக் காட்டாய்
எனில்தோன்றும் பொருள்நின் றிங் கிறுதி யாமே. ௧௦௭

**(உரை)** எல்லாப்பொருளும் நித்தமில்லை அநித்தமென்று புத்தா நீசொல்லாநிற்பை, நீகூறிய அநித்தம் இல்லாதபொருளுக்கோ உள்ள பொருளுக்கோ உளதிலதான பொருளுக்கோ, அநித்தம் இல்லாததற்கென்று நீகூறின் இல்லாதது என்றுமில்லையாம்; ஆகையால், இல்லாததற்கு உண்டாவதில்லை. உள்ளதற்கென்றுகூறின் உள்ளதில்லையாகாது என்றுமுண்டாகவேண்டும். உளதிலதாம் பொருட்கென்றுகூறின் அதுவும் உளதிலதாகையால், உள்ளதில்லையாகாது இல்லாததுண்டாகாது. அதனால் இவை யநித்தியமன்று, தோன்றும் பொருள்களின் இப்பொருள் அநித்தமல்லாத நித்தமென்றொன்றைக் காட்டாயென்று கூறின், தோன்றும் பொருளாகிய தூலவுடல் தோன்றிநின்று கெடுதலையுடைத்தாம்.

ஆதலாற் சூக்குமவுடலுக்கு அநித்தமில்லையென்பது கருத்து. அன்றியுந் தோன்றியிடுந் தூலதேகமும் வன்னபேதமும் ஒருகாலும் இடையறாமல் தொன்றுதொட்டு வருதலால் அதுவும் நித்தியமென்னுங் கருத்தாகக்கொள்ளினும் அமையும். ௧௫

அங்குரம்வித் தின்கேட்டில் தோன்றுமது போல அனைத்
துருவுங் கெட்டுவழி யாகு மென்னின், அங்கவற்றுக் காக்
கக்கே டறைந்தா யெல்லாம் அநித்தமெனும் உரைமறந்தாய்
அருகனுமா னாய்நீ, இங்குமுளை யிலைமரமாய் எழுந்தீண்டிச்
செல்லா திறந்ததே எழுந்தபடி நில்லா தென்னின், மங்கி

யிடாதேபால தருணவிருத் தையாய் வரும்வடிவு திரிந்து
நின்று மாயுங் காணே. ௧௦௮

(உரை) முளையானது வித்துக்கெடத்தோன்றும்; அதுபோல எல்லா வுருவங்களுங்கெட்டுப் பின்பு அவ்வழியே தோன்றுமென்று, புத்த! நீ கூறின், எல்லாம் அநித்தமெனுஞ் சொல்லைமறந்து உருக்களுக்கு ஆக்கக்கேடு கூறினாய். அதனால் நீயும் க்ஷமணன் மதவழியிலேயாயினாய். அற்றன்று, இவ்விடத்து அம்முளை இலையும் மரமுமாய் வளர்ந்து செல்லாத வளர்ச்சியைக் கைவிடுவானேன்; ஆதலால், எழுந்தபடி நில்லாதென்று நீகூறின் தோன்றினவுருவங் கெடாமல் நின்று பால தருண விருத்த அவத்தைகளைப்பொருந்தி அவ்வவத்தைகள்தோறும் பேதப்பட்டுப் பின்பு தூலவுடல் கெட்டுப்போம். ௧௪

உடல்பூத மெனின்ஒன் றுக்கொன் றுபகை ஒன்றுவுதிர
சுக் கிலமென்னின் மரத்தினுளுக் கல்லி, னிடமாகத் தவளை
யுரு வந்தவா றியம்பாய் இருவினைகா ணெனின்வினைக ளிரண்
டுருவாய் நிற்கும், திடமாக வன்னமுரு வெனின்உண்ண
வுண்ணச் சென்றுவள ருங்காயந் தேயுமுணர் வென்னின், மட
வோனே அருவுணர்விங் கசேதனமாய் உருவாய் வளராது
வருமில்லா தெனின்மலர்வான் வருமே. ௧௦௯

(உரை) புத்த! நீ உருக்கள் பூதரூபமென்றுகூறின் பூதங்களொன்றோடொன்று பகையாதலால் அவை தம்மிற்கூடி யுருவாகாது, சுக்கில சுரோணிதங்கள்கூடி உருவாமென்று நீகூறின், மரமிடமாகத் தோன்றும் உளுவுங் கல்லினிடமாகத்தோன்றுந் தவளையும் உருப்பெற்றதற்குச் சுக்கில சுரோணிதங்கள் கூடிவந்தவாறுசொல்லாய், புண்ணியபாவங்கள் தாமே உருவமாமென்றுகூறிற் புண்ணியம் பாவமிரண்டுந் தம்மிற்கூடி யோருருவந் திரண்டதாக வேண்டும்; அது கூடாது. நிச்சயமாகவே அன்னசாரமே யுருவாமென்றுகூறிற் போஜநத்தால் வளருங்காயம் விருத்தாவத்தையில்வளராது தேய்தல் காண்டும். அதனால் அன்னசாரமுமன்று, உணர்வுதானே யுருவமெடுத்துக்கொண்டதென்றுகூறின் அறியாதவனே அருவமாயிருக்குமறிவு அசேதநமாயிருக்கும் உருவமா யிவ்விடத்து வளராது, இல்லாததொன்று உருவமாய் வருமென்று கூறின் இல்லையாயதில்லையேயாம்; ஆகையால், நீ கூறிய இது ஆகாயப்பூப்போலப் பொய்யாகவரும். ௧௫



என்றுமிலா தொன்றின்றாய் வருமுருவம் வித்தின் எழு
மரம்போ லெனின்வித்தி னுண்டாய்நின் றெழுங்காண், நின்ற
தேல் வித்தின்மரங் கண்டதில்லை யென்னின் நெற்கமுகாய்
நீளாது நெல்லாயே நீளும், ஒன்றிலொன் றங் கிலாமையினா
லுதியாகா ரணம்பெற் றுதிப்பதுகா ரியமதுவு முள்ள
தாகும், மன்றமதிக் கலைபோலக் கந்த மைந்து மருவியுள
தெனும்உரையும் மறந்தனையோ இன்றே. ௧௧௦

(உரை) யான்கூறிய பொய்யன்று, என்றுமில்லாததொன்றுண்டாய்வரும்; அஃதெங்ஙனென்னின், வித்தினிடத்திலே மரந்தோன்றுமாபோலவென்று, புத்த! நீ கூறின், அம்மரம் வித்தினிடத்திலே யுண்டாய் நின்று எழுதலன்றி யில்லையாய் நின்று எழாதுகாண், அப்படிவித்திலே மரமுண்டாமாயின் வித்தினிடத்திலே காணவேண்டும். வித்தினிடத்தின் மரங்கண்டதில்லையென்று கூறின் நெல்வித்துக் கமுகாய்வளராது நெல்லேயாம், ஒருமரத்தில் ஒருமரம் உண்டாகாதாகையால் இல்லாததுண்டாகாது, வித்துக்காரணமாக மரங்காரியப்படுதல் உள்ளதாம், நிச்சயமாக மதியுங்கலையும் போலக் கந்தங்கள் ஐந்தும் பொருந்தி உருவுண்டாமென்னுஞ் சொல்லும் இன்றுமறந்தாயோ. ௧௬

உருவமெ.லாம் பூதவுபா தாய சுத்தாட் டகவுருவ மென்
னின் நீ உலவைத்துக்கு, மருவும்அன லோடுநீர் மண்கந்த மிர
தம் வன்னம்இலை வன்னிக்கு வளிநீர்மண் வாசந், தருமிரத
மிலைநீர்க்குத் தழல்கால்மண் கந்தந் தானில்லைத் தலத்தினுக்
குச் சலமனல்கால் கூடி, வருவதிலை இந்திரிய விடயமான
மாபூதங் களுமறியாய் மதிகெட்டாயே. ௧௧௧

(உரை) புத்த! நீ சுத்த உருவமெல்லாம் பூதவுருநான்கும் உபாதானவுரு நான்குமாகிய எட்டுங்கூடியே வருமென்றுகூறின், அவையெட்டும் ஒன்றோடொன்றுகூடாது. அஃதெங்ஙனமென்னில், காற்றுக்குத் தன்குணமாகிய சலித்தலொழிந்து அனலும் நீரும் மண்ணும் என்பவற்றின் குணமாகிய உருவம் இரதங் கந்தங்கள் கூடுவதில்லையாம். அக்கினிக்குத் தன்குணமாகிய வுருவமொழிந்து வாயுவும் நீரும் மண்ணும் என்பவற்றின் குணமாகிய பரிச ரச கந்தங்கள் கூடுவதில்லையாம். அப்புவுக்குத் தன்குணமாகிய இரதமொழிந்து அக்கினியும் வாயுவும் பிருதிவியும் என்பவற்றின் குணமாகிய ரூப சலந கந்தங்கள்

கூடுவதில்லையாம். பூமிக்குத் தன்குணமாகிய கந்தமொழிந்து ஜலமும் அக்கினியும் வாயுவும் என்பவற்றின் குணமாகிய இரதமும் உருவமுஞ் சலித்தலுங் கூடுவதில்லையாம். ஆகையால் இவையெட்டுங் கூடியுரு வாகாது. அந்தமகா பூதமுங் குணமும் இந்திரியவிடயங்களென்பதும் அறியாய் புத்தியில்லாதாய். கஎ

மருத்தெண்ணெய் தனின்மருந்து நின்றாற் போல
மறைந்தெட்டுஞ் சூக்குமமாய் மருவு மென்னில், திருத்து
மவன் மருந்தெண்ணெய் சேர்த்தாற் போலச் சேர்ப்ப
வன்வே றுண்டெல்லா வுருவும் எட்டும், பொருத்தியதே
லொருதன்மை யாம்பொருள்க ளொன்றின் குணமொன்றிற்
புகாதறைகை பொருளறியாய் பூத, உருப்பொருள்வே றுபா
தாயப் பொருள்வேறு காட்டா யுபாதாயம் பூதகுணங் குண
குணியா முலகே. ககஉ

(உரை) மருத்தெண்ணெயின் மருந்துதோன்றாமற் கரந்துநின்று நன்மையைத் தருமாபோல, பூதவுருவும் உபாதாயவுருவுமாகிய எண் வகையுந் தூலங்கெட்டுச் சூக்குமவுருப்பெற்று நிற்குமென்று புத்த! நீ கூறின், வியாதியைத்தீர்க்கும் மருத்துவன் அவ்வெண்ணெயையும் மருந்தையுஞ் சேர்த்தாற்போல, பூதவுருவையும் உபாதாயவுருவை யுங்கூட்டி உண்டாக்குவான் ஒரு கர்த்தாவேண்டும்; எல்லா உருவத் தையும் இவ்வெட்டுமே யுண்டாக்குகின்றனவென்று கூறின் அப் பொருள்களெல்லாம் ஒருதன்மைப்படவேண்டும். அவ்வுருக்களின் குணங்களில் ஒன்றின்குணம் ஒன்றிற்கூடாது; ஆகையாற் சொல்லு கைக்குப்பொருள் அறியாய், அன்றிப் பூதவுருப்பொருளையும் உபா தாய வுருப்பொருளையும் வேறுகாட்டவல்லையாயிற் காட்டாய்; உபா தாயமாவது பூதகுணமாம்; அந்தக் குணத்தையுடையது பிரபஞ்ச மாம். கஅ

அழிந்துணர்வை உணர்வுதரு மெனின்அழிந்த தாக்கா
தாமுணர்விற் பொருள்வினைகள் அணையா வாகும், அழிந்தி
டுவ தாக்கியெனின் முன்னொரு காலத்தே அறிவிரண்டு நில்
லாதங் கறக்கே டின்றி, அழிந்துணர்வை உணர்வுதரு
மெனின்நித்தா நித்தம் அடையும்உணர் வுக்கநித்த மாயே



செல்லா, தழிந்தெருவை ஆக்குவது போலாக்கு மென்னின்
ஆம்பொருள்வே றழிந்துசத்தி கிடந்தாக்கும் அவையே.

(உரை) தோன்றிய அறிவு கெட்டுப் பின்னோரறிவையுண்டாக்கு மென்று புத்த! நீ கூறின், கெட்ட அறிவு மற்றோரறிவையுண்டாக்க மாட்டாது; அன்றியும் ஆகிற அறிவும் முன்னறிவுகெடுதலாற் கெட்ட அறிவும் அறியும்பொருளையுஞ் செய்யும் வினையையும் அறிந்துஞ் செய்யவுமாட்டாது, முன்னையறிவு பின்னையறிவை யுண்டாக்கிக் கெடுமென்று கூறின் ஒருகாலத்தே இரண்டறிவு தோன்றிநில்லாது, அவ்விடத்து முன் அறிவு முற்றக்கெடாது சிறிதுநின்று மேலோ ரறிவை யுண்டாக்கிப் பின்னிறந்திடுமென்று நீகூறின், உணர்வுக்குச் சுபாவம் நித்தாநித்தமாதலால் உணர்வு அநித்தமென்று கூறியது பொருந்தாதாம். பயிருக்கிடும் எருவும் வைக்கோலுந் தாங்கெட்டுப் பயிருக்கு நன்மைகொடுப்பதுபோல, முன்னை யறிவுகெட்டுப் பின்னை யறிவையும் உண்டாக்கும் என்றுகூறின், அவ்வெருவும் வைக்கோலுந் தூலங்கெட்டுச் சூக்குமமாகிய வீரியங்கிடந்து பயிர்க்கு நன்மை கொடுக்கும்; அதுபோல, உன்னறிவுசேரக்கெடாதென்ன வேண்டு மாகையால், நீ கூறிய அதற்கு நித்திய மில்லையென்ன வேண்டா; ஆம்பொருள் வேறென்றதனால் எருவால் நன்மைபெறும் பயிர் வேறா னாற்போல அறிவாலாம் பொருளும் வேறென்க. ககூ

கேடிலாச் சந்தானத் தேபலிக்கு மென்று கிளக்கும்நீ
சந்தானம் நித்தமாகும், ஓடுநீர் போலழிந்தா முணர்வொழுக்க
மென்னின் ஒழுகுநீ ரிட்டதெல்லா முடன்கழிதல் போலத்,
தேடுபொருள் சீலம்பா வனைகுறிவிஞ் ஞானஞ் சென்றவுணர்
வோடேகு நின்றுணர்வின் ஏயா, நீடுநீர் முன்னொழுகிக்
கெடாதுநிறைந் தோடு நிகழுணர்வுங் கேடின்றி நிறைந்து
செலுங் காணே. ககச

(உரை) உணர்வுகெடாத தொடர்ச்சியாலே உணர்வுதோன்று மென்று புத்த! நீகூறின் அந்தத்தொடர்ச்சிதான் நித்தமாகவேண்டும். ஆற்றின்கணோடு நீர் முன்சென்றது வற்றப் பின்சென்றது அவ் வெல்லையி னிறந்துபோமாறுபோல, முன்னையறிவுகெடப் பின்னை யுண்டாகிய அறிவு மிக்க அறிவாமென்று நீகூறின், ஓடுகின்ற நீரின் கண் உண்டானவையெல்லாம் அந்நீரோடுகூடக் கழிந்துபோகப் பின்

ணர்ச்செல்லுநீர் அவற்றைக்கூடமாட்டா ; அதுபோல, முந்தையறிவால்தேடும் பொருள்கள் சீலம் பாவனை குறி விஞ்ஞானம் இவையெல்லாம் முன்னையறிவோடு கெடுமாகையாற் பின்னையுண்டாம் அறிவிற் கூடமாட்டா. விடாமலோடுநீர் முன்னொழுகிய தன்மைகெடாமல் நிறைந்தோடியவாறுபோல, அறிவு இடையறாமற்றோன்றுமென்று நீகூறின், அப்படியுண்டாம் அறிவு அநித்தியமன்று ; நித்தமாய் நிறைவுபெற்றுச் செல்லவேண்டும். ௨௦

சந்தானங் காரணமோ காரியமோ இரண்டின் தன்மையதோ காரணமுங் காரியமும் நித்தம், வந்தாருஞ் சந்தானத் தொடர்ச்சியெனின் அதற்கும் வருநித்தந் தோற்றக்கேடடைதலின்மற் றொன்றேல், ஐந்தான கந்தங்களன்றாய் நித்தம் அடைபொருளாம் அறிவும்அறி வடைவு மின்றிச், சிந்தாமுன் பின்னாகிப் பின்முன் னாகித் திரிந்துவருந் திரிவறிந்துதோரா தேரே. ௧௧௫

(உரை) நீ தொடர்ச்சியென்றது காரணமாய் நின்றதோ, காரியமாய்நின்றதோ, காரணகாரியமாய் நின்றதோ, காரணமென்னில் என்றுங் காரணப்பட்டுவருகையால் நித்தமாம் ; காரியமென்னின் என்றுங் காரியப்பட்டுவருகையால் அதுவும் நித்தமாம். காரணகாரிய தொடர்ச்சி மீளவந்து பொருந்துமென்று நீகூறின் அப்படிக் காரணகாரியப்படுதலுமாய்த் தோன்றுதலுங் கெடுதலுமாய் தொன்றுதொட்டு வருதலால் அதற்கும் நித்தியத்துவமுண்டாம். மற்றோரறிவென்னில் அப்படிக் காரணகாரியப்படுதற்கு இந்திரியங்களோடொருபொருளாகாமல் அவ்வறிவு வேறொரு பொருளாகலானும் இந்திரியங்கள் அவ்வறிவுக்கு மூலமல்லவாகையானும் அவ்வறிவு நித்தியமாக அடையும் பொருளாம். அங்ஙனமாயின், ஆன்மாவும் ஆன்மாவால் அடையும் பொருளுமாக அறிதலின்றி முறையே கெட்டு இந்திரியங்களறிவாகவும் அறிவு இந்திரியங்களாகவும் முறை பிறழ்ந்து வரும் ; இவற்றின் திரிவையறிந்து விசாரியாய் ; புத்தனே. ௨௧

ஒருகாலத் துணர்வுகெட்டா மெனின் உதிப்பீ றொன்றாம் ஒருபொருளின் திரிவுனக்குக் கால மானால், வருகால நிகழ்காலங் கழிகால மென்று வழங்குவதென் பொருள்வரவு நிலைகழிவால் இன்றேல், திரிகாலம் செப்பிடாய் பொருட் செயலு மொன்றாம் செயல்மூன்றும் ஒருகணத்தே சேருமென்னில், தருகால மூன்றாகும் தாமரைநூ றிதழில் தள்ளூசி யுங்கால மூன்றினையுந் தருமே. ௧௧௬



(உரை) காலம்பேதப்படாது ஒருகாலத்திலே அறிவு கெடுதலும் உண்டாதலுஞ் செய்யுமென்று புத்த! நீ கூறின் சங்காரமுஞ் சிருஷ்டியும் ஒரு தொழிலாகவேண்டும், ஒருபொருளின் திரிவே உனக்குக் காலமென்று சொல்வையானால், எதிர்காலமென்றும் நிகழ்காலமென்றும் கழிகாலமென்றும் வழங்குவானேன்? அப்படி வழங்கியது பொருள்களானது வருதலும் நிற்றலுங் கழிதலுமாதலாற் காலமில்லையென்று சொல்லுவையாயின், மூன்று விதமான காலத்தின் பெயரை நீ சொல்வாயல்லை. அங்ஙனங் காலபேதமில்லையாயின், இருது பேதாதிகளுங் குணபேதாதிகளுமில்லையாய்ப் பொருள்களெல்லாம் ஒரு செயலாகவேண்டும். அப்படிப் பேதித்த மூன்று செயலும் ஒருகணத்திலே சேருமென்னில், அப்படிக் கணத்திலே யுண்டாயதுவுங் காலமூன்றினையும் உடைத்தாம் ; அஃதெங்ஙனமென்னில், தாமரையிதழ் நூறடுக்கிற் செலுத்தின ஊசியும் இதழ்தோறும் பற்றுகையும் உருவுகையுங் கழிகையுமாய் மூன்றுகாலத்தைத் தருமாதலாற் பொருட்செயலன்று காலமுண்டா மென்றறிவாயாக. ௨௨

உணர்வுகா ரணமுணர்வுக் கென்னின் நித்தம் உணர்வுக் குண்டாகினின் றுணர்வையுதிப் பியாதிங், குணர்வுசந் தானவிடத் தொழிந்தாற் பின்னை யுண்டாகா துடலுணர்வுக் குபாதானமென்னின், உணர்வுடலின் இடையறா துதிக்க வேண்டும் உடலுணர்வின் வினையினால் உணர்வுதிக்கு மென்னில், உணர்வுவினை யுளதொடுங்கா துணர்வுதருஞ் செய்தி உணர்வைவினை தரினொருவன் செயல்வினையின் றாமே. ௧௧௭

(உரை) அறிவுகாரணமாக மற்றோரறிவுண்டாமென்று புத்த! நீ கூறின், நீ அநித்தியமென்று கூறுகையால் அறிவுக்கு நித்தியமுண்டாகி நின்று மற்றோரறிவையுண்டாக்க மாட்டாது. அன்றியும், அவ்வறிவுதான் வருகிற தொடர்ச்சியிலே கெட்டாற் பின்னையறிவு தொன்றாது. உணர்வுக்கு மூலகாரணமாகி நின்று உடலந்தோற்றுவிக்குமென்னில் அவ்வறிவு உடலில் உறக்கத்தின் கண்ணும் இடையறாமல் உண்டாகவேண்டும் ; உடலுணர்வின் வினையாலே உணர்வு

தோற்றுமென்று கூறின், இந்திரியங்கள் எப்பொழுதுங் கன்மத்தை யுடைத்தாதலால் அதனாலுண்டாமறிவு அழியப்படாது, அதுவன்றி உணர்வுவினையைத் தருமென்றும் வினை உணர்வைத்தருமென்றும் நீ கூறின் ஒருவர்க்குச் செய்யப்பட்ட கன்மமென்பதன்றே. ௨௩

வினையுணர்வு தரும்வினையை உணர்வுதரு மென்றும் விளம்பின்நீ உணர்வுபோல் வினையி னுக்கு, நினைவுவரும் ஒன் றையொன்று நிகழ்த்தி டாபின் நிலையின்மை யானிகழ்த்திக் கெடுதல் செய்யா, கனல்விறகில் பிறந்ததனைப் பொடிசெய் தாற்போல் கருத்துவினை யிற்றோன்றிக் கழிக்கும்வினை யென்னின், முனமுணர்வு பிறந்தளவே வினைகெடுக்கும் முன் பின் உதியாது முகிழ்நெருப்பின் விறகுதியா வாறே. ௧௧௮

(உரை) கன்மம் அறிவை யுண்டாக்குமென்றுங் கன்மத்தை அறிவுண்டாக்குமென்றும் புத்த! நீ கூறின், அறுவுக்கு நினைவுண்டானாற்போலக் கன்மத்துக்கு நினைவுண்டாகவேண்டும். அப்படிக்கன்மத்துக் கறிவில்லையாகையால் ஒன்றையொன் றுண்டாக்கமாட்டாது. அவை அநித்தியமென்று சொல்லுகையால் ஒன்றை யொன்றுண்டாக்கிக் கெடமாட்டாது. காட்டத்திலே அக்கினிதோன்றி அந்தக்காட்டத்தைத் தகித்தாற்போல, அறிவு கன்மத்திலே பிறந்து மீளவும் அக்கன்மத்தையே கெடுக்குமென்று நீகூறின், முன்பிறந்த அறிவு பிறந்தபோதே கன்மத்தைக்கெடுக்கும். பின் அக்கன்மம் அறிவை யுதிப்பிக்கமாட்டாது. அறிவும் பின்னர்க் கன்மத்தை யுதிப்பிக்கமாட்டாது. அஃதென்போல வென்னில், காட்டத்திலுண்டாம் அக்கி அக்காட்டத்தைச் சுட்டால் மீண்டொரு காட்டத்தை யுண்டாக்க மாட்டாதுபோல். ௨௪

பேயுநர கருஞ்சுரரும் பிரமருமாய் உலகிற் பிதாமாதா ஆதாரமொன்று மின்றிக், காயமொடு தாம்வருவர் என் றுரைப்பை காயங் காரியமாய் வருதலினால் காரணமுண் டாகும், ஆயுமுணர் வோசுத்த அட்டகமோ கன்மம் வடித் ததோ வடிவுசெய்து வைத்தாரும் உண்டோ, ஆயுமுணர் வுண்டாகில் அறைந்திடாய் உலகுக் காதிதுணை நிமித்தகா ரணமறிவ தறிவே. ௧௧௯



(உரை) பேயென்றும் நரகரென்றுஞ் சுரரென்றும் பிரமா முதலாயினாரென்றுஞ் சொல்லப்படுவார் உலகின் மாதா பிதாக்களுமின்றி இருப்புமின்றிக் காயத்தோடுகூடின வடிவமுடையராய் வருவரென்று புத்த! நீ கூறுவை. அக்காயம் காரியப்பட்டு வருகையினால் ஒருகாரணத்தானன்றி யுண்டாகாது. அக்காரண காரியங்களை அறியாய். அறிவையாகில், அக்காயங்கள் நீ ஆராய்ந்த வுணர்வுதானோ, சுத்தாட்டகமோ, அன்றிக்கன்மம் உண்டாக்கியதோ, அன்றி அவ் வடிவையுண்டாக்கினார் ஒருவருண்டோ? உனக்காராயத்தக்க அறிவுண்டாயிற் சொல்லாய். அவற்றை உண்மையாக அறியுங்காலத்துப் பிரபஞ்சவுற்பத்திக்கு ஆதிகாரணமென்றுந் துணைக்காரணமென்றும் நிமித்தகாரணமென்றும் உண்டாம். அதனை யறிவதுகாண் அறிவு.

உருவாதி கந்தங்கள் ஐந்துங் கூடி ஒருவன்வே றொருவனிலை யென்றுரைக்கும் புத்தா, உருவாதி ஐந்தினையும் உணர்பவன்வே றென்ன உணரும்விஞ் ஞானமென்றாய் அஞ் ஞானம் உணர்ந்தவரார், உருவாதி பொருள்காட்டித் தனைக் காட்டும் சுடர்போல் உணர்வுபிறி தினையுணர்த்தித் தனை யுணர்த்து மென்னின், உருவாதி பொருளினையும் சுடரினையும் காணும் உலோசனம்போல் உணர்வுபொருள் உணர்வதுவே றுண்டே. ௧௨௦

(உரை) உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞான மென்கின்ற கந்தங்கள் ஐந்துங்கூடி ஆன்மாவன்றித் தனித்தோரான்மா இல்லையென்று கூறும் புத்தா, அவ்வுருவம் முதலிய கந்தங்கள் ஐந்தையும் அறிவானொருவனுளனென்று நாங்கூறுவதன்று அவற்றை யறிவது சித்தமேயென்று கூறினாய், அந்தச் சித்தத்தை யுணர்ந்தவர் ஆரென்று வினாயவிடத்து, உருவங்கள் முதலாய பொருள்களையுங்காட்டித் தன்னையுங்காட்டும் விளக்குப்போல, சித்தமும் பிறிதுண்டாகியவற்றையும் அறிவித்துத் தன்னையும் அறிவித்து நிற்குமென்றுகூறின், உருவங்கள் முதலாகிய பொருள்களையும் அவற்றைக் காட்டி நிற்கும் விளக்கையுங் கண்டுநிற்குங் கண்போல, சித்தத்தையும் விடயத்தாலறியும் இந்திரியங்களை [illegible] வேறுண்டென்று அறிவாயாக. ௨௫

18710

காயமுடன் இந்திரியம் மனம்நான் என்று கதறுவாய்
காயம்உறக் கத்தறியா வாகும், வாயில்களும் அப்படியி
லொன்றையொன் றங் கறியா மனங்கணத்திற் கெடுங்கால
மூன்றின்வர வறியா(து), ஆயுமறி வாகியுடல் பொறிமனமூன்
றறிந்தாங் கவைநானல் லேனென்றும் அறிந்துமனத் தாலே,
ஏயுமொரு பொருள்கருதி இந்திரியப் பாலே இசைவித்துக்
காயத்தால் இயற்றுவதான் மாவே. ௧௨௧

(உரை) உடம்புடன் இந்திரியங்களும் மனமுமே ஆன்மா, வேறே ஆன்மா வென்றொன்றில்லையென்று கூப்பிடும் புத்தா! அக்காயம் உறக்கத்தினிடத் தறியாமையையுடைத்தாம். இந்திரியங்களும் அக்காயம்போல் உறக்கத்திலும் வியாத்தியிலும் ஒன்றறிந்த விடயத்தை யொன்றறியமாட்டா. மனமுங் கணத்திற்கெடும் காலமூன்றின் செய்தியையும் அறியமாட்டாது; ஆகையால், இவை ஆன்மா வல்ல, உடல்முதலாயின மூன்றினையும் ஆராயத்தக்க அறிவாய் அவற்றின் குணங்களை யறிந்தும் அவற்றை என்னுடல் என்பொறி என்மனமென்று சொல்லியும் அவை நானல்லே னென்றறிந்தும் மனத்தாற் பொருந்தத் தக்கதொரு பொருளைக்கருதி இந்திரியங்களின் பகுதி காட்டக்கண்டு காயத்தாலே தொழிலைச்செய்வது ஆன்மாவென்று அறிவாயாக. காலமூன்றாவன—பூத பௌஷ்ய வர்த்தமானமாம். ௨௭

கழிந்தஉணர் வேபின்னும் யானறிந்தே னென்று கருத
லினவ் வுணர்வறிந்த தென்னின் முன்னே, மொழிந்தமொழி
நான்மொழிந்தே னென்றால் வாய்தான் மொழிந்ததோ
மொழிந்தவன்வே றுளனாற் போல, எழுந்தவுணர் வெல்லாங்
கொண் டியானறிந்தே னென்ற தெதுஅதுகாண் உயிருணர்
வால் வாக்கான் மற்றை, ஒழிந்தகா யந்தன்னால் உணர்ந்து
ரைத்துச் செய்தங் குணர்வினுக்கும் ஆதார மாய்நிற்கும்
உயிரே. ௧௨௨

(உரை) முன்னொரு பொருளையடுத்துக் கெட்ட அறிவுதானே பின்புண்டாகியவற்றை யான்அறிந்தேனென்று விசாரிக்கையாலே அவ்வறிவேகாணு மறிவதன்றி ஆன்மா வென்றொன்றில்லை யென்று புத்த! நீ கூறின், முன்னே சொன்னசொல்லும் நான் சொன்னே னென்று சொல்லுதல் வாயாற் பிறத்தலால் வாய்சொன்னதோ அன்றே, அச்சொல்லைச் சொன்னவன் ஒருவனுண்டானாற்போல, உண்டாய அறிவுகளெல்லாவற்றையுங் கொண்டறிந்து அதனை யான் அறிந்தேனென்றது எது அதுகாண் ஆன்மா. மனத்தாலும் வாக்காலும் ஒழிந்ததாகச் சொல்லப்பட்ட காயத்தாலும் அறிந்துஞ்சொல்லியுந் தொழில்செய்தும் அம்மனத்திற்குப் பற்றாய்நிற்கும் ஆன்மா. ௨௮



இந்திரிய வீதிஎழுஞ் சித்தம்நெஞ்சத் தெழுஞ்சித்த
மென்றிரண்டு மொன்றுகெட்டே யொன்று, வந்தெழுவ
தெனில்கனவில் கண்டபடி நனவின் வாய்திறவார் நனவு
கண்ட படிகனவிற் காணார், அந்தனுரு வன்னங்க ளறிந்திடா
னின்றேல் அறிகனவும் இறந்துணர்வும் அழிந்துறக்கம்
அடைந்தால், உந்துவதோர் சந்தான மில்லையுணர் உதிப்ப
உயிர்கனவு நனவினையும் உணருங் காணே. ௧௨௩

(உரை) இந்திரிய வியாபாரத்தால் உண்டாம் அறிவென்றும் மனத்திலுண்டாம் அறிவென்றும் இரண்டாய் ஒன்றுகெட்டொன்று தோன்றுமென்று புத்த! நீ கூறின், கனவிற்கண்டதெல்லாம் நனவிற் சொல்லமாட்டார்; நனவிற்கண்டதெல்லாங் கனவிற் சொல்லமாட்டார். அன்றியும், பிறவிக்குருடன் பிறர் வடிவத்தையும் வன்னத்தையும் அறியமாட்டான். இந்திரியக் குறைவாலே அறிவுதோன்றிற்றில்லை யென்று நீ கூறின், அறியத்தக்கனவும் அழிந்து உணர்வும் அழிந்து உறக்கத்தையும் அடைந்தால் உண்டாகத்தக்க தொடர்ச்சியில்லை, ஆன்மாக்களுக்கு இச்சா ஞானக்கிரியைகளுண்டாகக் கனவினையும் நனவினையும் அறியாநிற்கும். (இன்றேலெனவே - இந்திரியங்கள் அறிவிக்குமென்பது புலப்பட்டது. வீதி - நேரே செல்லுதல். அந்தன் - அந்தகன்.) ௨௯

ஒருகாலத் தோரிடத்தில் ஒருணர்வேல் செவிதான்
ஒன்றுணரா திருசெவியும் உணரும் ஓசை, ஒருகாலத் திரு
கண்ணும் இருசெவியும் மனமும் ஒருவனைக்கண் டவனுரை
கேட் டுணர்ந்திடுமைம் பொறியும், ஒருகாலும் உணராவுள்
உணர்வின்றிப் பொறிகள் ஒன்றொன்றா வுணர்வதுள் ளுணர்
வைந்தும் உணரா, ஒருகாலும் பொறிவிகற்பித் துணராவுள்
ளுணர்வுக் குள்ளதுகாண் விகற்பமிரண் டும்முணர்வ
துயிரே. ௧௨௪

**(உரை)** ஒருகாலத்திலே ஒருபொறியிடத்திலே ஒருணர்வாக அறியுமென்று புத்த! நீ கூறினாய். அப்படியாயின், இரண்டுசெவியும் அறியும் ஓசையை ஒருசெவியறியமாட்டாது ; இரண்டுசெவியாலும் அறியவேண்டும். அஃதன்றியும், ஒருகாலத்தே இரண்டுகண்ணும் இரண்டுசெவியும் மனமுங்கூடி ஒருவனைக்கண்டு அவன்வார்த்தை கேட்டு அதனையறியாநிற்கும். ஐம்பொறிகளும் மனங்கூடாமல் தனித்தொருகாலும் அறியமாட்டா. பொறிகளோரோவொன்றாகத் தாமறியும்விஷயத்தை யறியும்அத்தனையே. அம்மனமும் ஏககாலத்து ஐம்பொறியின் விஷய அறிவுகளைந்துங்கூடி யறியமாட்டா. அதுவுமன்றி, பொறிகள் ஒருகாலுந் தாமறியும் அறிவன்றி விகற்பித்தறிய மாட்டா. அந்தப் பொறிகளுடனே கூடிநின்று விகற்பித்தறிவது மனத்துக்குள்ள குணங்காண். இப்பொறிகளையும் மனத்தையுங் கொண்டறிவது ஆன்மாவாம். ௩௦

அருஉணர்வு மாய்ஆறும் மாறி மாறி அங்கங்கே தோன்றி
யிடின் அகத்துநிலை யின்றி, உருவினோடு பாலதருண
விருத்தா வத்தை உண்டாகா துறக்கத்தின் உடல்தட்ட
அழைப்ப, வருவதுணர் வெங்கிருந்து நெஞ்சிலிருந் தென்
னில் வாயில்வினை யறிந்தெழுப்ப ஆயுஅறி யாதாம், திரி
யொழிய இடிஞ்சில்தொடத் தீபமெழா அடக்கஞ் சென்ற
பொழு தாலுணர்வு நின்றநிலை செப்பே. ௧௨௫

**(உரை)** மனமானது அருவுமாய் உணர்வுமாய்ப் பொறிகளைந் தோடுங்கூடி ஆறுவிதமாய் மாறிமாறித் தோன்றியிடுமென்று புத்த! நீகூறின், மனம் அருவமாகையால் உருவின் நிலையுடையதுமன்றாய்க் காயத்தோடுகூடிப் பால தருண விருத்தாவத்தையும் உண்டாகாதாதல் வேண்டும். அஃதன்றியும், அவத்தைப்பட்ட விடத்து உடலிற்றட்டவும் அழைப்பவும் அறிந்து வருமறிவு எவ்விடத்திருந்தென்று சொல்லாய்; நெஞ்சிலிருந்தென்று நீகூறின், சத்தாதிவிடயங்களிலே செல்லுந்தொழிலையறிந்து செலுத்தமனமறியாதாம்; அஃதென்போ லென்னில், திரியைப்பற்றி நின்றவொளி அத்திரிமாய்ந்தால் உடன் மாய்தலன்றி இடிஞ்சிலைப்பற்றித் தோன்றாதாகையால், உணர்வுக்கு மூர்ச்சைவந்த பொழுது அறிவு நின்றநிலை சொல்வாயாக. (ஆயு-மனம். உரு-தேகம். ஆல்-அசை. இடிஞ்சில்-அகல்.) ௩௧



இச்சைவெறுப் பியற்றலின்பத் துன்பம்ஞானம் இவை
யணுவின் குறியாகும் இவற்றில் இச்சை, நச்சிநுகர்ந் தொரு
பழத்தின் இனங்கண்டு முன்பு நான்நுகர்ந்த கனியினின
மென்று நச்சல் பின்பு, மெச்சவெறுப் பாதிகளும் இப்படியே
யாகும் இவைமுன்பும் பின்புமுணர்ந் திடுத லாலே, நிச்சய
கர்த் தாஒருவ னுளனென்று நல்லோர் நிறுத்திடுவர் வெறுத்
திடுவர் நின்னுடைய பொருளே. ௧௨௬

**(உரை)** ஆசை வெறுத்தல் தொழில்செய்தல் சுகதுக்கப்படுதல் அறிவு இவை முதலியவெல்லாம் ஆன்மாவின் குணங்களாம். இவற்றில் ஆசையாவது முன்னொருபழத்தை ஆசைப்பட்டு நுகர்ந்து பின்பு அதனை யொப்பதொரு கனியைக்கண்டு முன்புநானுகர்ந்த கனியின் இனம் ஈதென்று பின்பும் அதனை யாசைப்படுதல், ஒழிந்த வெறுப்பு முதலாயினவும்,இத்தன்மையேயாகும். அவ்விச்சாஞானக்கிரியை முதலாயினவற்றை ஆன்மா முன்பும் பின்பும் அறிகையாலே நிச்சயமாக ஆன்மா வொருவனுளனென்று சொல்லுவர் பெரியோர். நீ ஆன்மா இல்லையென்று சொல்லுஞ்சொல்லை அப்பெரியோர் தள்ளாநிற்பர்.

எப்பொருட்கும் இரந்தரமாய் இடங்கொடுத்து நீங்கா
திருளொளிதா னன்றிஇரண் டினுக்குமிட வகையாய், ஒப்
பில்குணஞ் சத்தமதாய் வாயுவாதி உதித்தொடுங்க நிற்கும்வா
னுயிர்முன்னே சொன்னோம், செப்பிடுங்கா லம்பொழுது
நாளாதி யாகித் திரிவிதமாய்த் தீமைநன்மை செய்யுந் திக்குத்,
தப்பில்குணக் குக்குடக்குத் தெற்குவடக் காதி தானாகித்
திரியாதே நின்றுபலந் தருமே. ௧௨௭

**(உரை)** முன்னர் வானமும் ஆன்மாவுங்காலமுந் திக்கும் இல்லையென்ற புத்தனே ! நீ கேட்பாயாக. எல்லாப்பொருளுஞ் செல்லுதற்கு வழியாய் இடங்கொடுத்து நீக்கமின்றி இருளும் ஒளியுமன்றாய் இரண்டும் நிற்கத்தக்கவிடமாய் உவமையில்லாத குணம் சத்தமாய் வாயுமுதலிய பூதங்கள்நாலுந் தோன்றி யொடுங்குதற்குத்தாரகமாய் நிற்கும்வானம், ஆன்மாவுண்டென்று முன்னமேசொன்னோம், சொல்லத்தக்க காலமானது காலையும் உச்சியும் மாலையுமென்னும் பொழுதாயும், நெருநல் இன்று நாளை என்னும் நாளாயும் மற்றுமுள்ளனவாயும், இத்தன்மையிலே மூன்றுவிதமாய் வேற்றுமைப்பட நன்மை

தீமைகளைச்செய்யும், திக்கானது கிழக்கு மேற்கு தெற்கு வடக்கென்று தவறில்லாததாய் அநாதியிலும் ஆதியிலும் உள்ளதாய்ப் பிறழாமல் அத்திசைகளை நோக்கிக் கன்மஞ்செய்தோர்க்குக் கன்மபலத்தைக் கொடுக்கும். ஆகையால், ஆகாசமும் ஆன்மாவும் காலமுந் திக்கும் உண்டென்றறிவாயாக. ௩௩

காரியமாய் உலகெலாம் இருத்த லாலே கடாதிகள்போல்
காரியகர்த் தாவொருவன் வேண்டும், ஆரியமாய் அறம்
பொருளோ டின்பவீ டெல்லாம் அறைந்துயிர்கட் கறிவு
செயல் அளிப்பதுநூல் அந்நூல், சூரியராய் உள்ளவர்கள் ஓத
ஓதிக் கொண்டுவர லான்முன்னே குற்ற மின்றிச், சீரியபே
ரறிவுடையோன் செப்ப வேண்டும் செயலினுக்குங் கரிவேண்
டுஞ் சிவனுளனென் றறியே. ௧௨௮

(உரை) கர்த்தாவும் நூலுமில்லையென்று கூறிய புத்தனே! பிரபஞ்சமெல்லாங் கடாதிகள்போலக் காரியப்பட்டுவருதலாலே இதனைச்செய்வானொரு கர்த்தாவேண்டும். வடமொழியாய் அறம்பொருள் இன்பம் வீடென்னும் நான்கு காரியமுஞ்சொல்லி ஆன்மாவுக்கறிவையுஞ் செயலையுங் கொடுப்பது வேதாகமங்கள் காண்; அவ்வேதாகமங்கள் குசலராயுள்ள பிரமாதிகள் ஓதுவிக்க மகாவிருடிகளாலே ஓதப்பட்டு அவர்கள் வழியாகத் தொன்றுதொட்டு வருதலால் ஆதியிலே தவறின்றி மிக்க பெரிய அறிவையுடையோனாலே சொல்லப்படவேண்டும். அவ்வேதாகமங்களாற் சொல்லப்பட்ட கன்மத்துக்குக் காண்பானொரு சாட்சியும்வேண்டும். ஆகையாலே சிவனாலே நூல் சொல்லப்பட்டதென்றும் அவனே கர்த்தா என்றும் அறிவாயாக.

மரங்களுயி ரல்லவென்று மறுத்துச் சொன்னாய் வாடு
தல்பூ ரித்தலால் மரங்களுயி ராகும், திரங்குநீர் பெறுதொ
ழியிற் பெறிற்சிரத்தை சேரும் சீவனல எனினுலகில் சீவ
னெல்லாம், உரங்கொள்வ தூண்பெறிற் சோரும் ஊண்பெ
றுவேல் உலர்ந்தமர நீர்பெற்று லுய்யாதுள் ளுயிர்கள், கரந்
தசினை முட்டைகட்கு வாயிலின்று வாயில் கண்டிலதேற்
பூத்துக்காய்த் தெழல்மரங்கள் உயிரே. ௧௨௯



(உரை) மரம்முதலியன உயிருள்ளன அல்லவென்று புத்த! நீ சொன்னாய். அவைமெலிதலாலும் பருத்தலாலும் அம்மரமுதலியவை உயிருள்ளனவாகும். மரம்முதலியன நீர்பெறுதொழியில் வாடுதலும் அந்நீர்பெற்றாற் பூரித்தலும் இயல்பு, சிரத்தைபெற்ற ஆன்மாவல்லவென்று நீகூறில், உயிருள்ளவற்றுக்கெல்லாம் ஊண் பெற்றாற் பருத்தலும் ஊண்குறைந்தால் மெலிதலுங் குணமாகையால் உலர்ந்தமரத்துக்கு நீரைவிட்டாற் பரிணமமில்லை யாதலான் மரம்முதலிய வுயிருடையவாம். அற்றன்று. மரம்முதலியனவற்றுக்கு இந்திரியங்களில்லையாகையால் உயிரல்லவென்று கூறின், ஆன்மாவையுள்ளடக்கிநிற்கும் முட்டை சினை முதலியவற்றிற்குவாயில் தோன்றாவாறுபோல மரம்முதலியவற்றுக்கும் வாயில்தோன்றா. அம்முட்டை சினை முதலியவற்றுக்கு வாயில் பின்புதோன்றக்கண்டனம், இவற்றிற்கு வாயில்தோன்றக் கண்டதில்லையென்று கூறில், அம்மரம்முதலியனவற்றுக்கு இந்திரியங் கட்புலனாகாதாயினும் பூத்துக்காய்த்து வளர்தலுங் காண்டலால் இந்திரியமும் உயிரும் மரம்முதலியனவற்றுக்குண்டென்று அறிவாயாக. ௩௫

ஒருமரத்தின் உயிரொன்றேல் கொம்பொசித்து நட்
டால் உய்யுமுயிர் ஒன்றுபல வாமோ வென்னில், கருமரத்
தின் வித்துவேர் கொம்புகொடி கிழங்கு கண்கலந்து கொள்
ளுமுயிர் அண்டம் வேர்ப்புத், தருபிறப்புச் சராயுசங்கள் சந
நமும்பெற் றாற்போல் தானடையும் உற்பிச்சம் தலநடவா
வென்னில், பெருநிலத்தில் காலிலார் நடப்பரோ பேதாய்
பிறப்பின்விதம் அநேகங்காண் பேசுங் காலே. ௧௩0

(உரை) மரத்துக்கு ஆன்மா வுண்டாமாயின் ஒருமரத்தின் கொம்பை முறித்து நட்டால் அதனைப்போல வளர்தலால், ஒருயிர் பலவுயிராமோவென்று புத்த! நீ கூறில், மரத்தினுண்டாகிய வித்து வேர் கொம்பு இவற்றையும் பிறவற்றிற் கொடி கிழங்கு கணுக்கள் இவற்றையுங் கருப்பமாகக்கொண்டு ஆன்மாக்கள் தோன்றும். முட்டையிலுங் கசிவிலுந்தோன்றிய ஆன்மாக்கள்போல நடைபெற்று வித்திற்றோன்றும் மரம்முதலியன பூமியிடத்து நடைபெறாவாகையால் ஆன்மா அன்றென்று நீகூறில், சொல்லுங்காலத்துக் காலிலார் பெரிய

பூமியிடத்து நடக்கவல்லரோ அப்படியே இந்திரியக்குறைவான ஆன்மபேதம் அநேகமாகவுண்டு பேதையே. ௩௬

தின்னுமது குற்றமிலை செத்ததெனும் புத்தா தின்னை
யெனக் கொன்றுனக்குத் தீற்றினர்க்குப் பாவம், மன்னு
வதுன் காரணத்தால் தின்னு தார்க்கு வதைத்தொன்றை
இடாமையினுல் வதைத்தவர்க்கே பாவம், என்னினூனை யூட்
டினர்க்குப் பாவஞ் சேர என்ன தவம் புரிகின்றாய் புலால் கட
வுட் கிடாயோ, உன்னுடலம் அசுசியென நாணி வேறோர்
உடலுண்ணில் அசுசியென உணர்ந்திலைகாண் நீயே. ௧௩௧

(உரை) தான் கொல்லுமது குற்றமுடைத்து; செத்தது தின்னுமது குற்றமில்லையென்று கூறும் புத்தா! நீதின்பையென்று கருதி உனக்கு ஒன்றைக்கொன்றூட்டினர்க்குப் பாவம் உன் காரணத்தாலுண்டாம். அஃதெங்ஙனமென்னில், தின்னுதார்க்குக் கொன்றூட்டுவாரில்லை யாகையால். என் காரணத்தாற் பாவமுண்டாகாது கொன்றவர்க்கே பாவமுண்டென்றுகூறின், உன்னைப் பரிந்தூட்டினவர்க்குப் பாவமுண்டாக நீ என்ன தவத்தைச் செய்கின்றாய். அஃதன்றியும், நீ புலால் நுகருங்காலத்தே உன்கடவுளுக்கும் புலாலையூட்டுவை. அஃதன்றியும், உன்னுடம்பு சுத்தமில்லையென்று வெட்கி நீ பிறவூனை நுகருமது சுத்தமில்லையென்று அறிந்தாயில்லை. ௩௭

குடைநிழலும் கண்ணுடிச் சாயையும்போல் பிறப்புக்
கொள்ளும்உணர் வென்னில்கா ரணமழிய அழியும், அடை
நிழல்போல் கந்தமைந்தும் அழியுமுனக் கிங்கே அவையழிந்
தால் அருங்கதியின் அணையுமுணர் வின்றாம், இடைகனவில்
எழுமுணர்வு நனவுணர்வா னாற்போல் எழுமுணர்வு கன்மத்
தால் நினைந்துகதி யென்னில், மிடைசினையும் அந்தனுமுட்
டையுமுயிர்விட் டக்கான் மேவுவதென் பிறப்பினுடல் விடாது
கன்ம வுணர்வே. ௧௩௨

(உரை) குடையின்கட் குடைபோல நிழல்தோன்றுந் தன்மையும் கண்ணுடியிற் காட்டின வுருப்போல உருத்தோன்றுந் தன்மையும்போல இக்காயம்விட மற்றொருகாயத்தை எடுத்துக்கொள்ளுமென்று புத்த! நீ கூறின், குடையுங் கண்ணுடியுமாகிய காரணங்கெட அவற்றிற்பொருந்திய நிழலாகிய காரியங்கெட்டாற்போல, கந்தங்கள் ஐந்தும் உனக்கிவ்விடத்தேகெடும்; அவைகெடவே, இந்திரியங் காரணமாகக் காரியப்படும்அறிவும் இங்கே யழியுமாகையால், காரணமாகிய கந்தங்கள் ஐந்தும் அழிந்தால் அரியகதியையடையும் அறிவில்லையாம். கனவிடையெழும் அறிவு மெய்யறிவாய்ப் பரிணமித்தாற்போல, கன்மங்கட்கீடாக நினைந்துண்டாமுணர்வு கதியிற்கூடுமென்று நீகூறின், இந்திரிய அறிவுகெட்டால் தம்மினெருங்கிய சினையும் பிறவிக்குருடனும் முட்டையும் உயிர்போனாற் பெறுங்கதியாது. அதனால், பிறப்பினுடலைக் கன்மவுணர்வு விடாது.

கன்மவுணர்வென்பது - ஆன்மஞானம். சினையும் அந்தகனும் முட்டையும் பூர்வகன்மத்துக்கீடாகத் தொழின்மறந்து கிடக்கையாற் கதியடையாவென்பதாயிற்று. கதியென்றது - நற்பிறப்பு. ௩௮



ஐந்துகந்தம் சந்தானத் தழிதல்பந்த துக்கம் அறக்
கெடுகை முத்தியின்பம் என்றறைந்தாய் கந்தம், ஐந்துமழிந்
தால்முத்தி அணைபவர்யா ரென்ன அணைபவர்வே றில்லை
யென்றாய் ஆர்க்குமுத்தி யின்பம், ஐந்தினுணர் வினுக்கென்
னில் அழியாத உணர்வுண் டாகவே அவ்விடத்தும் உருவாதி
கந்தம், ஐந்துமுள வாமதுவும் பந்த மாகி அரந்தைதரும்
முத்தியின்பம் அறிந்திலைகாண் நீயே. ௧௩௩

(உரை) கந்தங்கள் ஐந்துந் தொடர்ச்சியிலே சேட்டை கெடுதல் பந்ததுக்கமென்றும் அவை கர்ப்பூரதீபம்போலச் சேரக்கெடுகை முத்தியின்பமென்றும் புத்த! நீ கூறினாய், கந்தள் ஐந்துங்கெட்டால் முத்தியிற்செல்வார் யாரென்றுழிச் செல்வாரொருவருமில்லையென்று கூறினாய். முத்திபெறுவாரில்லையாயின் முத்தியின்பம் யாவர்க்கு? கந்தங்கள் ஐந்திற்றோன்றும் அறிவிற்கென்று கூறின், மனத்தால் அறியுமறிவு கெடாதிருக்குமாயின், அவ்விடத்திலும் உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞானமென்னுங் கந்தங்கள் ஐந்தும் உண்டாதல் வேண்டும். அவை யுண்டாகவே, முத்தியிடத்திலும் பந்ததுக்கமுண்டாய்க் கிலேசத்தையுந் தரும்; ஆதலால், நீ மோக்ஷசுகத்தை அறிந்திலை அதனைக் கேட்பாயாக. ௩௯

அநாதிமுத்த னாய்ப்பரனாய் அசலனாயெல்லா அறிவு
தொழில் அநுக்கிரக முடையஅரன் கன்மம், நுனுதிகமற்

ெருத்தவிடத் தேசத்தி நிபாத நுழைவித்து மலங்களெல்லாம் நுங்க நோக்கி, மனுதிகர ணங்களெல்லாம் அடக்கித் தன்னை வழிபடுநல் லறிவருளி மாக்கருணைக் கையால், இறுதை பிறப் பினில்நின் று மெடுத்து மாறு இன்ப முத்திக் கேவைப் பன் எங்கள் முத்தி யிதுவே. ௧௯௪

(உரை) அநாதியிலே மலரகிதனுய் எப்பொருட்குமேலாய்ச் சலனமில்லாதவனுமாய்ச் சர்வஞ்ஞத்துவமுஞ் சர்வகிருத்தியமுஞ் சர்வாநுக்கிரகமும் உடையனுகியபரமேசுவரன் ஆன்மாக்கள்செய்த புண்ணியபாவ மிகுதி குறைவறத் துலையொத்தவிடத்து அருட்சத்திபதிவித்துக் குருமூர்த்தியா யெழுந்தருளி மலங்கள்கெடத் திருக்கண் சாத்தியருளி மநமுதலாகிய வுட்காரணங்களையும் இந்திரிய முதலாகிய புறக்காரணங்களையுங் கெடுத்துத் தன்னை வழிபடு நால்வகையாகிய வழிபாட்டையுமருளி மிகுந்த காருண்ணியக் கையாலே பொல்லாப் பிறவிக்கடலில் வீழாமலெடுத்து ஒழியாத இன்ப முத்திக்கரையிலே வைத்தருளுவன்; இதுவே எங்கள் முத்தியாகையால், நீயும் இவ்வழியினின்று முத்தியின்பத்தை அநுபவிப்பாயாக.

நூனுதிகம் - நுனுதிகமென விகாரப்பட்டது. ௪௦

---

## யோகாசாரன் மதம்

போதமே பொருளாய்த் தோன்றும் பொருளதாய் எழலாற் போதம், வாதனை அதனுற்கூடி வருதலால் வடிவிலாமை, ஆதலாற் கனவே போலும் சகமுள தறிவேயாமென்(று), ஓதினுன் ஓதா னுய உணர்வினுல் யோகாசாரன். ௧௯௫

(உரை) அறிவே இந்திரியங்களுமாய்த் தோன்றப்பட்ட உருக்களுமாய் வருதலானும், அவ்வறிவு இந்திரியவாதனையினுலே கூடி வருதலானும், அவ்வறிவு அரூபமாதலானும், அநித்தியரூபமாகிய பிரபஞ்சம் சொப்பனம் போலும். யோகாசாரன் சாத்திரத்தை உணராத அறிவினுலே சௌத்திராந்திகளில் வேறுபட்டு இந்திரியவாதனையால் அறிவுண்டாமென்றும் பிரபஞ்சங் கனவேபோலும் என்றும் அறிவேயுள்ளதென்றுங் கூறினுன். ௧

---

## யோகாசாரன் மத மறுதலை

போதமுந் தவிர வேறோர் வாதனை புகன்றுய் போதம்
வாதனை இரண்டுண் டென்னுய் போதவா தனையும் என்னிற்
காதலாற் பொருளி னேடு கலந்தபின் எழுங்க ருத்தாம்
வாதனை கனவு கண்ட பொருளின்மேல் வருங்க ருத்தே.

(உரை) யோகாசாரா! நீ அறிவொழிய வேறொரு வாதனையுண்டென்று சொன்னுய். அப்படியாயின், போதமென்றும் வாதனையென்றும் இரண்டுண்டென்று கூறுய். வாதனைதானும் அறிவேயென்று கூறின், அறிவு சத்தாதிவிடயத்திலே கலக்க வேண்டுமென்னும் இராகத்தாற் கலக்க அக்கலப்பிலே பலகாற்கருத்தைச் செலுத்துதலே வாதனை; ஆகையால், வாதனை அறிவன்று. கனவானது நனவிற் கண்ட பொருளின்மேற் கருத்தைச் செலுத்துவதாதலாற் பிரபஞ்சங் கனவுமன்று; அதனுல், நீ கூறியது மித்தையேயாம். ௧

அறிவதே பொருள தாயின் அகம்சடம் என்ன வேண்டும்
பிறிபொரு ளாகும் பேதித் திதம்பிர பஞ்ச மென்னில்
உறுபொருள் உருவந்தோய்ந்தால்உணர்வுமவ்வுருவாய்நிற்கும்
செறிபொரு ளதுவாய் நிற்கும் தெளிபளிங் கதுவேபோல.

(உரை) யோகாசாரா! நீ கூறிய அறிவுதானே பிரபஞ்சரூபமென்று கூறின், நான் உடம்பென்று சொல்லவேண்டும். அறிவும் உருவும் வேறுபாட்டையுடைத்து. அறிவும் உருவும் வேறுபாட்டையுடைத்தாமென்னில், உருவை நீங்கிநின்ற அறிவுதானே நான் பொருளென்று கூறும் பகுதியாம். அறிவு உருவத்தோடு கூடினுல் அவ்வறிவு உருவந்தானுய் நிற்கும்; அஃதென்போல என்னில், அடுத்த வன்னத்தோடு கூடிய பளிங்கு அவ்வன்னந்தானுகத் தோன்றுமாபோல. ௨

## மாத்தியமிகன் மதம்

அவயவம் பொருளாய்த் தோன்றும் அவயவம் ஒழிந்தாற் பின்னை, இவைபொருளென்ன வேறொன் றிலாமையாற் பொருள்கள் இன்றாம், அவைபொருள் இலாமை யாலே அறிவுமின் றாகு மென்று, நவைதரு மொழியி னாலே நவின்று மாத் தியமி கன்றான். கஙஅ

(உரை) இந்திரியம் பத்தும் பொருளாய்த்தோன்றும், இந்திரியங்கள் கெட்டாற் பின்பொருள் இவையென்றறிதற்கு ஒன்றுமில்லாமையாற் பொருளு மில்லையாம். அந்தப் பொருள்களில்லாமையினாலே பொருளைக் கூடிநின்றறியும் அறிவுமில்லையாம், என்றிப்படிக் குற்றத்தைத்தருஞ் சொல்லாலே மாத்தியமிகன் சொல்லுவான்: க

## மாத்தியமிகன் மத மறுதலை

கடத்தினில் அவயவங்கள் படத்தினில் புகாமற் காத்தும், படத்தினில் அவயவங்கள் கடத்தினிற் புகாமற் கொண்டும், இடத்தினில் நிற்கும் ஆகும் அவயவி இரண்டுங் கூடி, உடைத்தொரு பொருளுண் டாகப் பொருளுமுண் டுணர்வும் உண்டே. கஙசு

(உரை) மாத்தியமிக! நீ அவயவமே பொருளாவது அவயவியில்லையென்று கூறினாய்; கடாதிகளின் அவயவங்கள் படாதிகளிற் செல்லாமை நீக்கிக்கொண்டும், படாதிகளின் அவயவங்கள் கடாதியிற் செல்லாமை நீக்கிக்கொண்டும், அவ்வவ்வவயவங்களிலே அவ்வவ்வவயவி நிற்குமாகையால், அவயவமும் அவயவியுங் கூடியே ஒரு பொருளாக வுண்டாவது, அப்படி யுண்டாகவே அதுபோலப் பொருளாகிய சரீரமும் உண்டு உணர்வும் உண்டென்று அறிவாயாக.

கடாதிகட்கு அவயவி மண். படாதிகட்கு அவயவி நூல். பொருள் - அவயவம். உணர்வு - அவயவியாகிய ஆன்மா. க

கருவியும் ஒளியும் வேறு கருதிடுங் கருத்தும் நிற்கப்
பொருள்புண ராமை யாலே போதம்வந் தெழுவ தின்றாம்



மருவிடும் பொருளுண் டாக வந்தெழும் புந்தி யானால்
பொருளுள தாகு மாகப் போதமும்உள்ள தாமே. கசO

(உரை) இந்திரியங்களும் இந்திரிய விடயமாகிய சத்தாதிகளும் அவற்றாற் காணப்படும் பொருள்களை வேறுபட ஆராயும் அந்தக் கரணங்களுமுண்டாய் நிற்கவும் ஆன்மாவந்து கூடாதது கொண்டு ஒருபொருளையுந் துணிந்தறியும் அறிவில்லையாம். இந்திரிய விடயங்களோடும் அந்தக்கரணங்களோடுங் கூடிநின்றறியும் ஆன்மாவுண்டாக அறிவுமுண்டாமாகையால் ஆன்மாவுண்டாகும். அஃதுண்டாகவே அறிவுமுள்ளதாம். (இவ்விடத்துப் பொருளென்றது - ஆன்மாவை.)

## வைபாடிகன் மதம்

அரிசனம் நூறு கூட வருணம்வந் தெழுந்தாற் போல
விரிசகம் பொருள்கள் ஞானம் விரவிட மேவித் தோன்றும்
தெரிசன மிதுவே யென்று தெளிந்திடும் தோர் வீடு
பரிவொடும் அடைவீ ரென்று பகரும்வை பாடி கன்றான்.

(உரை) மஞ்சளுஞ் சுண்ணம்புங் கூட ஒரு சிவப்புநிறந் தோன்றுமாபோல, காணப்பட்ட பொருள்களும் இந்திரிய விடயமான அறிவுங் கூடினபோது பிரபஞ்சப்பொருள்கள் பொருந்தித்தோன்றும் இதுவே ஞானதரிசனமென்று தேறுவீராக. அப்படித் தெளிந்தீராயின், புத்தர் வீடுதரும் இன்பத்தை அடைவீரென்று பரிவோடுஞ் சொல்லா நிற்பன் வைபாடிகன். க

## வைபாடிகன் மத மறுதலை

பொருளது புறம்ப தாகும் போதம்அந் தரம தாகும்
தெருளிடின் இரண்டுஞ் சென்று சேர்ந்திடு மாற தின்றாம்
அருவுணர் உருவ மேய மாதலி னாலுங் கூடா
உருவரு வுடைய வைபா டிகநின் மாற்றம் இன்றே. கசஉ

(உரை) அறியப்படும்பொருள் புறத்ததாகும்; அறியுமறிவு அகத்ததாகும்; ஆதலால், தெளிய அறியுமிடத்து இரண்டுஞ்சென்று கூடுந்தொழிலில்லையாம். அன்றியும் ஞானமாகிய அறிவு அரூபமாகை

யாலும், ஞேயமாகியபொருள் உருவமாகையாலுங் கூடா. உருவும் அருவுங் கூடுமென்ற வைபாடிகனுக்கு இனிச்சொல்லும் உத்தரமில்லையாம் (பொருள் - பிரபஞ்சம், ஞேயமுமது.) ௨

---

## நிகண்டவாதி மதம்

வாச மாமலர் அசோகு பேணிமறை நீதி யோடுமலை
யுந்தவத்(து), ஆசை யாலுடை அகன்று மாசினை அடைந்
தில் வாழ்தரும் அறத்தினில், பாச மானது தவிர்ந்து பண்
டிபட வுண்டு பாயினொடு பீலிமேல், நேச மாயவை தரித்து
ளோர்களின் நிகண்ட வாதியை நிகழ்த்துவாம். ௧௪௩

(உரை) மணமும் வண்டும் பொருந்திய மலர்களையுடைய அசோக விருட்சத்தைத் தெய்வம்போலப்பேணி வேதமார்க்கத்தோடு மறுதலைப்பட்டுரைக்குந் தவத்தினை ஆசைப்பட்டு உடுக்கையைக் கைவிட்டுக் குளிக்குந் தன்மையின்மையின் அழுக்கடைந்து பிரமசரிய முதலாகிய ஆச்சிரம மூன்றுக்கும் பற்றாயிருக்கிற கிருகத்தாச்சிரமத்தை விட்டு வயிறுபெருக்கவுண்டு பாயுடுத்துப் பீலி கைப்பிடித்து இங்ஙனஞ் சொல்லியவற்றிலே சிநேகமாய் அவற்றைத் தரித்துள்ளோர்களின் நிகண்டவாதிமதத்தைச் சொல்லுகின்றோம்.

கண்டம் - உடை. நிகண்டம் - உடையின்மை. அஃது க்ஷமணரில் நிகண்டவாதி எனக்கொள்க. ஆசீவகர்க்கு உடையுளதாம். மறைநீதியோடு மலையுந்தவம் - எக்கியாதி, கர்மம், கர்த்திருவாதம், பஸ்மருத்திராக்ஷம் முதலியவைகளை நீக்கிய கன்மம். ௧

ஈறி லாதன அநந்த ஞானமுதல் எண்கு ணங்களெனும்
ஒண்குணம், மாறி லாதமதி மேவு சீதமென மன்னி வான
வர் வணங்கவே, வேறு லாவுகுண ஞானஆவரணி யாதி எட்
டினையும் விட்டசீர், வறு பான்மையுடை நீடு வாழ்அருகன்
எங்க ளுக்கிறைவன் என்றனன். ௧௪௪

(உரை) கேடில்லாதனவான அநந்தஞானமுதலிய நற்குணம் எட்டையும் கோணாத மதிக்குக் குளிர்ச்சி தன்னிடத்திலே தோன்றினாலொப்பத் தோற்றுவித்து, அந்த நற்குணங்களோடு கூடாது பாந்த



தீக்குணங்களென்று சொல்லப்பட்ட ஞானாவரணிய மாதியாகிய எட்டுக்குணங்களையும் விட்ட அழகினையும், இந்திராதிதேவர்கள் போற்ற மிக்க பான்மையையுடைத்தாய் நெடிது வாழ்கின்ற அருகபரமன் எங்கள் கர்த்தாவென்று கூறினான்.

நற்குணம் எட்டாவன—அநந்தஞானம், அநந்ததரிசனம், அநந்தவீரியம், அநந்தசுகம், நிர்நாமம், நிர்க்கோத்திரம், நிராயுஷியம், சம்மியதாபாவம் என்பன. சம்மியதாபாவம் - அழிவின்மை. ஞானாவர்ணியம் எட்டாவன—ஞானாவர்ணியம், தரிசனாவர்ணியம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷியநாமம், கோத்திரநாமம், ஆயவந்தராயம், காயவந்தராயம் என்பன. இவையே தீக்குணங்களென்றும் பெயர்பெறும். சீரோறுபான்மை யென்பது - நின்மலத்துவ முதலியன. ௨

கருவி கண்படு தொடக்கொ ழிந்துவரு கால மூன்றின்
நிகழ் காரியம், பெருக நின்றொரு கணத்தி லேஉணர் பெருந்த
வக்கடவுள் பீடினால், மருவி நின்றுவழி பட்ட வர்க்கும்மலை
வுற்ற வர்க்கும்மனம் ஒத்திடும், குரிசி லெங்களிறை யென்று
பின்னுநிகழ் குற்ற மின்மையது கூறுவான். ௧௪௫

(உரை) இந்திரியவிடயத்தால் வருந்தொடக்கைத் தன்னிடத்து நின்றுங் கைவிட்டுப் பெருங்காலமுதலாக மூன்றுகாலத்திலும் உள்ள காரியங்களை மிகவும் ஒரு கணமாத்திரத்தாலே அநந்தஞானத்திலே அறியத்தக்க பெரிய தவத்தையுடைய தேவன், தனது பெருமையினாலே பொருந்தநின்று வழிபாடு செய்தவர்க்கும் மாறுபட்டவர்க்கும் ஒருநீர்மையான தலைவன், எங்கள் சுவாமியென்றுகூறி அவனுக்குக் குற்றமில்லாத தன்மையைப் பின்னுஞ் சொல்லுவான். மனமொத்திடுகை - சமதரிசனமாகை. ௩

பசித்தல் தாகபய செற்ற மோடுவகை மோக சிந்தனை
பழித்தலோய், நசித்தல் வேர்வினொடு கேத மோடுமதம்
வேண்ட லீண்டதி சயித்தலும், புசிப்பு வந்திடு பிறப்பு றக்க
மிவை விட்டொ ரட்டகுண பூதனாய், வசித்த வன்னுலகின்
மேலி ருந்தொருசொல் இகல னுக்கருளும் என்றனன். ௧௪௬

(உரை) பசித்தல் - பசித்தல்,—தாகம் - ஆசை,—பயம் - அச்சம்,—செற்றமொடு - மாற்சரியம் ஆகிய இவற்றுடனே,—உவகை -

ஒன்றன்மேற் பிரியப்படுதல்,—மோகம் - மயக்கம்,—சிந்தனை - ஒன்றைச்சிந்தித்தல்,—பழித்தல் - ஒன்றை நிந்தித்தல்,—நோய் - வாத பித்த சிலேஷ்மம்,—நசித்தல் - சாதல்,—வேர்வினெடு - வியர்வோடும்,—கேதமோடு - கிலேசப்படுதலோடும்,—மதம் வேண்டல் - கர்வத்தைவிரும்பல்,—ஈண்டு அதிசயித்தலும் - இவ்விடத்து அதிசயப்படுதலும்,—புசிப்பு - உணவு,—வந்திடு பிறப்பு - ஜநித்தல்,—உறக்கம் - மூவகை நித்திரை,—இவைவிட்டு - ஆகிய இவை பதினெட்டையும் முற்றக்கைவிட்டு,—ஓரட்டகுண பூதனாய் - அநந்த ஞானமாதியாகச் சொல்லப்பட்ட எட்டுக்குணங்களையுடையனாய்,—வசித்தவன் உலகின்மேல் இருந்து ஒருசொல் இகலனுக்கு அருளுமென்றனன் - உலகத்துக்கு மேலாகிய பொன்னெயில் வட்டத்திருந்து சித்தபரமேட்டிகள் கேட்டதொரு சொல்லினுக்கு உத்தரமருளுமென்று கூறினான்.

பிறப்பு - தேவ மநுஷிய நரக விலங்கென நால்வகை. மூவகை நித்திரையாவன—நித்திராநித்திரை,பிரசலாப்பிரசலை,நிக்கிரககதி அனுக்கிரக கதியென்க. இதற்கருகன்கூறிய சொல்லாவது—பொன்னெயில் வட்டத்திருக்கிற சித்தபரமேட்டி என்னும் சகலாத்தரை இகலாத்தர் "தன்மம்பகவ" என்றுகேட்க, முரசுதாக்கச் சத்தங் கிளம்பினாற் போல வொருசொல் "பஞ்சாஸ்தமயம்" என்று சகலாத்தர் சொல்ல, இதுகொண்டு விசாரித்தான் எனக்கொள்க. ௬

அந்த வாய்மொழியி னால்அவன்சரண மாதி யோகமுத
லானநூல், இந்த மாநிலம் மயங்கி டாதவகை இங்கி யம்பி
னன் இதன்பொருள், வந்த காலமுயிர் தன்ம தன்மிஅறம்
மற்றும் விண்மருவு புற்கலம், பந்தம் வீட்டினொ டநாதியா
யிவை படைப்ப தின்றியுள பத்துமே. ௧௪௭

(உரை) அந்தப் பஞ்சாஸ்தமயமாகிய வாக்கியத்தினாலே அந்தச் சித்தபரமேட்டி சரணமாதியாகிய யோகமுதனூலை இப்பெரிய நிலத்துள்ளோர் மயங்காதவகை இவ்விடத்துச் சொன்னான். இந்தநூலிற் கூறியபொருள், உண்டானகாலம் ஆன்மா தன்மம் அதன்மம் புண்ணியம் பாவம் ஆகாசம் அணுவாய்த்திரண்டான்மத்தன்மை பொருந்தின புற்கலம் பந்தம் வீட்டோடுகூடப் பத்தும் ஒருவராற் படைக்கப்படாததாய் அநாதியே யுள்ளனவாம். தன்மமென்பது-தன்மாத்திகாயத்தை-



தன்மியென்பது - அதன்மாத்திகாயத்தை. சரணம்—ஆதிசரணம், சித்தசரணம், ஆசரியசரணம், தன்மசரணம் என நான்கு. மற்றுள்ளனவுங் கொள்க. ௫

நிற்ற லோடுதலை போதல் அன்மையை நிகழ்த்து நீடு
வெதி ரேகமும், உற்ற தாம்இவை கணத்தி லேமருவி உள்ள
வாபுரியு மாறுதான், கற்ற காலமள வெய்தி வாழுமுயிர் காய
மேவிநிறை வானதே, பெற்று வேறுவரு தன்மை நேரறிவு
பெற்ற தாகியுள பேசிலே. ௧௪௮

(உரை) அநாதிப்பொருள் பத்திலே காலமானது நிகழ்காலமும் இறந்தகாலமும் இவையல்லாமையை விளக்காநின்ற நிலைபெற்ற எதிர் காலமுமாகிய மூன்றையும் பொருந்தியதாம். அன்றியும் இம்மூன்று காலத்தையும் ஒருகணப்பொழுதிலே பொருந்தியுண்டான தகுதியைச்செய்யுந் தொழிலையும் அந்தக் காலங்கற்றதாம், அக்காலத்தெல்லையைப் பொருந்திவாழும் ஆன்மாவானது சரீரியாய் அந்தச் சரீரமுழுதும் நிறைந்த தன்மையைப்பொருந்திப் பால தருண விருத்த அவத்தைகளினும் வேறுவேறாகவருந் தன்மையோடு பொருந்தின அறிவு பெற்றதாகியுள்ளதாம் சொல்லுங்காலத்து. ௯

பரந்து மீதுதரு மாத்தி காயம்அழி வித்து அநித்தமது
பண்ணிடும், நிரந்து கீழதரு மாத்தி காயமது நித்த மாய்மிக
நிறுத்திடும், புரந்த புண்ணிய மிதற்கு நன்மைபுகல் பாவ
மானவது தீமையே, தரும்பொ ருட்கிடம தாகும் வானமிகு
புற்க லன்களவை சாற்றுவாம். ௧௪௯

(உரை) விரிந்து மேலாகிய தன்மாத்திகாயமானது பூதகாயத்தை மேலும் எடாதபடி அழிவித்து அதனை அநித்தியத்தைச் செய்யும், நிரைபட்டுக் கீழாகிய அதன் மாத்திகாயமானது பூதகாயத்தோடு கூடி நித்தமாய் மிகவும் நிலைபெறுவித்திடும், மன வாக்குக் காயங்களாற் செய்யப்பட்ட புண்ணியமானது இத்தன்மாத்திகாயத்தைத் தருவதற்கு நன்மையாம். சொல்லப்பட்ட பாவமானது தீமையேதரும் அதன்மாத்திகாயத்துச் கேதுவாம். எல்லாப்பொருட்கும் இடங்கொடுத்து நிற்கும் ஆகாயம், இதனிடத்தில் தோன்றும் புற்கலப் பொருளை மேலே சொல்லுவாம்.

தன்மாத்திகாயமாவது - புண்ணியத்தால் எடுக்குந் தேகம். அதன் மாத்திகாயமாவது - பாவத்தால் எடுக்குந் தேகம். ௭

ஏணும் ஒன் றுடைய வாகி எங்கும்அ ணுவாய் இரும்புகல்
மரங்களும், பூணும் அங்குருவெ லாமு மாகுமிவை புற்க லப்
பொருள்கள் என்னலாம், காணும் அங்கறு வகைத்தொ ழில்
களவை கட்டு விட்டநெறி கன்மமேல், மாண நின் றுவரு
மாறி மாறிமுன் வகைந்த துண்டுவிட மாட்சியே. ௧௫௦

(உரை) ஒரு வலியுமுடையவாய் எவ்விடத்திலும் உருவமாய்த் திரண்டு இரும்பு கல்மரங்கண் முதலியனவுமாய் இவை யொழிந்தெடுத்துக் கொள்ளப்பட்ட உருக்களெல்லாமுமாய்த் திரியக்கணுபூர்வமென்னும் ஆன்மப் பெயரையுமுடையவாய் நிற்கும்; அவற்றைப் புற்கலப் பொருளென்று சொல்லலாம். பொல்லாங்காய்க் காணப்பட்டுள்ள அறுவகைத்தொழில்களே பந்தம், அப்பந்தத்தைவிட்ட ஒழுங்கே தவம். அத்தவந்தான் உடல் மேன்மேல்வருந் தவமாட்சிமையுண்டாய் நிலைபெற்று வர்த்திக்கும் ஆன்மாவுக்கு முன்பே புசிப்பதாகவுண்டாகப்பட்ட புண்ணியபாவங்கள் தொலையப்புசித்து விட்டமாட்சிமையே வீட்டைத்தரும்.

அணுபூர்வமாவன—தெய்வகதியாவைபூர்வம், மனுஷியகதியாவைபூர்வம், நரககதியாவைபூர்வம், பக்ஷிமிருககதியாவைபூர்வம், திரியக்காதியாவைபூர்வம் எனவிவை. இவற்றுள் திரியக்காதியாவைபூர்வம் - புற்கலப்பொருள். அறுவகைத்தொழிலாவன—கந்தம், ரசம், ரூபம், பரிசம், சத்தம், பரிணமம் எனவிவை. காமாதி யறுவகையுமாம். அ

---

## நிகண்டவாதி மத மறுதலை

அருக னுக்க னந்த ஞான மாதி ஆதி யாகவே
பெருக நிற்றல் சீதம் மாம திக்க டைந்த பெற்றியேல்
ஒருவும் இட்ட ஒப்ப வன்னு யிர்த்தி றத்தி னுள்ளபின்
மருவு மிக்க குற்றம் மேல் அறத்தின் மன்னி னானெனில்.

(உரை) அருக பரமனுக்கு ஞானாவரணியமாதியாகிய தீக்குணங்களெட்டு நீங்கப்பட்டு, அனந்தஞானமாதியாகிய நற்குணங்களெட்டுஞ் சந்திரனுக்குச் சைத்தியம்போல இடையேயுண்டாமென்று கூறினாய்; அதுவே முறையாயின், நீகூறிய உவமையின் நீங்கப்படும்; அஃதெங்ஙனமென்னில், கர்த்திருகுணமின்றியே சிலகுணத்தை விட்டுச் சிலகுணம்வந்து கூடிற்றென்பது ஆன்மகுணமாகையால், அவனும் ஆன்மகுணத்தை யுடையவனாவன்; ஆகவே விடப்பட்ட தீக்குணங்கள்எட்டும் முன்புண்டாய்விட்டவாம். அற்றன்று, அவன் ஞானாவரணியமாதியாகிய குணங்களைநீங்கி அநந்த ஞானமாதியாகிய குணங்களைக் கூடுதன்மேலான அறத்தின்கண்ணே பொருந்தினனாகையாலெனில். ௧



அறத்தின் மன்னு வித்தவன் ஒருத்த னாய் அவன்அறத்
திறத்தி னிற்றல் மற்றொ ருத்த னால்வி ளைந்த செய்தியாம்
மறத்தின் அற்ற வர்க்கெ லாம்வ ணக்கம் உன்இறைக்குமேற்
பிறக்கு மிங்க வத்தை கொண்ட தாரை யின்று பேசிடே.

(உரை) அவன் அத்தருமத்தினாலே பொருந்தினானாயின் அத்தன்மத்திலே நிலை பெறுவித்தவன் ஒருவனுளனாய் அவனாற் கூறப்பட்ட தன்மநெறியிலே நிற்குந்தகுதி ஒருவன் கற்பித்ததொழிலை ஒருவன்செய்த செய்தியாம். கொலையை நீங்கினவர்க்கெல்லாம் வணக்கமாகப்பட்ட உன்கர்த்தாவுக்கு மேலுமொருவனுளன் என்பதோர் எல்லையுண்டாமாகையால், முன்னர்க் கூறியவனையோ, அவன் கீழ்நின்றிந்திரியத் தொடக்குப்படாமல் தவஞ் செய்தவனையோ, நீ கர்த்தாவாகக் கொண்டது யாவரையென்று இப்போது சொல்வாயாக. ௨

கருவி தன்தொ டக்கொ ழிந்து கண்டு வாழு மென்றியேல்
உருவு கொண்டு நின்ற தென்னில் உண்டு தான்ம னாதிகள்
ஒருவி நின்ற தென்னில் அத்த மொன்றையும் உணர்ந்திடான்
பொருள்தெ ரிந்து போகை கால மொன்றி லேபுணர்ந்திடான்.

(உரை) உன் கர்த்தாவாகிய அருகபரமன் மனாதிகளாகிய கருவிகளினின்று அறியுமறிவை நீங்கிச் சர்வமுங் கண்டிருக்குமென்று கூறினாய். அப்படியாயின், அவனைச் சரீரம் பொருந்தி நின்றதென்று கூறின் மனமுதலாகிய கருவிகளுண்டாம். அவையொழிந்து காண்டற்கு வழியுமில்லை; அவனைச் சரீரநீங்கி நின்றதென்று கூறின், அவன் எல்லாவற்றையுங் கண்டு வாழுமென்று சொல்லுதலும் மித்

தியாவாதமாய் மற்றொன்றையும் உணர்ந்ததில்லையாவன். ஒரு பொருளை அறிதற்குக் கருவியான மூன்று காலத்தையும் ஒருகாலத்திலே உணருந்தன்மையனும் அல்லன். ௩

ஆர்வ கோப மான வைஅ டைந்தொ றுப்ப வர்க்கெலாம்
சேர்வ தின்மை செப்பில் இன்று சீவன் மேவு காயமால்
ஒரு மன்னர் போல வேஉ யிர்க்க ளித்த லென்றியேல்
ஏர்கொள் பொன்எ யிலிடத்தி ருத்தல் பெற்ற தென்கொலோ.

(உரை) காமக்குரோத முதலியவற்றோடுங் கூடி அக்கூட்டுறவு தீதென்றறிந்து நீக்கப்படுவோர்க்கெல்லாம் இன்று முத்தியடைதலில்லையாம்; சொல்லுமிடத்து உன் அருக பரமனுஞ் சீவனோடுகூடின காயமுடைமையால். அற்றன்று, க்ஷத்திரிய தன்மமான சாத்திரத்தை ஆராய்ந்த ஒப்பற்ற அரசரைப்போல உயிர்க்குத் தலையளி செய்தலே அருகபரமனுக்கு முறைமையென்று கூறுவையாயின், அவ்வரசரைப் போலத் துஷ்ட நிக்கிரகமுஞ் சிஷ்டபரிபாலனமுஞ் செய்யவேண்டும். அவ்வரசரைப்போல ஒரு நிலத்திலிருந்து துஷ்ட நிக்கிரகமுஞ் சிஷ்டபரிபாலனமுஞ் செய்யாது அழகிய பொன்னெயில் வட்டத்திருக்கப் பெற்றதியாது. அதுவுமன்றி "மருவி நின்றுவழிபட்டவர்க்கு மலைவுற்றவர்க்கு மனமொத்திடுங் குரிசில்" என்று நீ முன்னர்க் கூறுகையானும் அரசர் இவ்வுலகத்திருத்தலானும் உன்னருக பரமன் அரசரையொக்குந் தன்மையும் உடையனல்லன். ௪

சொல்ல தொன்று கொண்டி கலின் ஆத்தன் நாட வேசொலின்
இல்லையாம் மநாதி தான் இயம்பு மாற தெங்ஙனே
நல்ல வாம் மநாதி தான் அவர்க்கு நாட வேயிலை
ஒல்லை ஊமர்ஊம ருக்கு ரைத்த வாற தொக்குமே. ௧௫௫

(உரை) உன் அநாதி அருகபரமனாகிய சகலாத்தன் ஒரு சொல்லைக்கொண்டு ஆதி அருகபரமனாகிய இகலாத்தன் கேட்க மாறுபாடில்லாத பொருளைச் சொன்னானென்று கூறின், உன்னாதி அருகபரமனுக்கு மநாதிகளில்லையென்று நீ கூறுகையால் அநாதி அருகபரமனுடன் ஒரு சொற்கேட்டுப் பலவிதமாக நூல் சொன்னபடி எப்படி? அஃதன்றியும், உன்னாதி அருகபரமனுக்கு நன்றாகிய மநமுதலாகிய கருவியும் அறிதற்கில்லையாகையால் அவன் கேட்டபடி எப்படி,



அநாதி அருகபரமன் ஒரு சொற்சொல்ல அதனை ஆதி அருகபரமன் கேட்டுப் பலவிதமாக நூல்செய்தானென்று நீ சொல்லுமது, ஊமர் சொல்லவூமர் கேட்டு நூல்செய்தாரென்னுந் தன்மையை யொக்கும்.

இன்ப பூமி சேரி கலில்நாதன் இவ்வி ருநிலத்
துன்பம் ஆங்கு ணர்ந்திடாமை இங்கு வந்த சொல்லிடான்
இன்ப பூமியில் இருந்தி ருந்தி யாவும் எய்திடில்
துன்ப பூமி யாமுணர்ந்து சொல்ல வல்ல தில்லையே. ௧௫௬

(உரை) புண்ணிய பூமியாகிய பொன்னெயில் வட்டத்திருக்கிற மாறுபாடில்லாத அநாதி அருகபரமன் இப்பெரிய பூமியிடத்துண்டாகிய துன்பங்களை அறியானாகையாலும் மநாதிகள் இல்லையாதலானும் இப்பூமியில்உண்டானவற்றை இப்படிச் சொல்லென்று சொல்லமாட்டான். புண்ணிய பூமிப் பொன்னெயில் வட்டத்திருந்து அநாதி அருகபரமன் பூமியில் துன்பம் யாவையுமறிந்து சாத்திரஞ் செய்யச் சொன்னானென்று சொலின், புண்ணிய பூமியாகிய பொன்னெயில் வட்டமுந் துன்பபூமியாகையால் நீ தலைமயங்கச் சொல்லுஞ் சொல்லுக்கு யாமறிந்துசொல்லுஞ் சொல்லில்லையாம். ௬

நிறைந்து காய மோடு சீவன் நின்ற தாகில் இவ்வுடல்
குறைந்த போது தானும் இத்தொ டொக்க வேகு றைந்திடும்
இறந்து போகும் இக்கடம் இறந்த போது நீர்குடத்(து)
உறைந்து டைந்தி டக்குடம் உலர்ந்த வாற தொக்குமே.

(உரை) இச்சரீரத்தோடு ஆன்மாவானது நிறைந்து நிற்குமென்று கூறினாய்; அங்ஙனம் நிறைந்துநின்றதாகில் ஆன்மாநின்ற காயங் குறைந்தபோது ஆன்மாவுங்குறைந்து அறிவு குறையவேண்டும். அன்றியும், கெட்டுப்போகின்ற இச்சரீரமானது, கெட்டபோது, குடத்தின்கண் நிறைந்துநின்ற நீர் குடமுடைய அந்நீருங் கெட்டாற்போல, ஆன்மாவுங்கூடக் கெடவேண்டுமாகையால் ஆன்மா சரீரமுழுதும் நிறைந்து நிற்குமென்று சொல்வாயல்லை. ௭

கண்ட நூல் தருந்தன் மாத்தி காய மோட தன்மமும்
உண்டு மீது கீழ் உலாவி உற்று நின்றி டப்பொருள்
கொண்ட தென்னில் அத்த மிவ்வி ரண்டு தன்மை கூடிடா
வண்டு புட்கள் போலெ னின்வ ழங்கி டாக ணத்திலே. ௧௫௮

(உரை) ஆன்மாவானது தான்செய்த புண்ணியத்தாலே தன் மாத்திகாயத்தை யெடுத்துக்கொண்டு மேலாகப்பொருந்தி நன்மையைப்புசித்து அதிலே பரந்திடுமென்றும், தான்செய்த பாவத்தாலே அதன்மாத்திகாயத்தை யெடுத்துக்கொண்டு கீழாகப்பொருந்தித் தீமையைப் புசித்து அதிலே பரந்திடுமென்றும் இப்படி இரண்டுகாயத்தை ஒருகாலத்திலே மாறிமாறிக் கைக்கொண்டதென்று அருகபரமன் அருளியநூல் சொல்லிற்றென்னின், ஆன்மா ஒருகாலத்திலே நின்று இரண்டுரு எடுத்துக்கொள்ளமாட்டாது, மயிர்க்குட்டிப் புழுவண்டானாற்போலவும் மற்றொருபுழு வேட்டுவாளியானாற்போலவும் வேறுபடக் காயம் எடுத்துக்கொள்ளுமென்று நீகூறின், அந்த ஜந்துக்களுங் கணப்பொழுதிற் பேதித்தனவில்லையாம். ஆகையால், ஆன்மா வேற்றுருவத்தை விரைய எடுத்துக்கொள்ளமாட்டாது.

ஆன்மா தானின்ற தூலகாயத்தை விட்டுப்போய்ச் சூக்கும காயத்துடனே நின்று நன்மைதீமைப் பயனை அநுபவிக்குமதொழிந்து நின்ற தூலகாயத்திலே பேதப்பட்டு வேற்றுரு எடாதென்பது கருத்து. அதன்மம் - அதன்மாத்திகாயத்தை. பொருள் - அத்தம் - இரண்டும் ஆன்மா. ௮

நீடு பாவ புண்ணி யங்க ளால் நிரய வானகம்
கூடு வோர்கள் இன்று நின்று கூட்டு வோர்கள் இன்மையின்
ஓடு மாக ணைத்தி றத்தின் உற்ற வாறு ரைத்தியேல்
வீடு மாக ணைக்கு நாடும் வில்லி போல வேண்டுமே. ௧௫௯

(உரை) ஆன்மாக்கள்செய்த புண்ணியபாவங்களை அறிந்துநின்று அவற்றிலே செலுத்துவிப்போன் ஒரு கர்த்தாவில்லையென்று நீ சொல்லின், மிக்கபாவங்களால் நரகங்களையும் மிக்க புண்ணியங்களாற் சுவர்க்கங்களையும் பொருந்திநின்று அநுபவிப்பாரில்லையாம். விரைந்த செலவையுடைய பெரிய அம்பு இலக்கிலேபட்டாற்போலச் செய்யப்பட்ட புண்ணியபாவங்கள் செய்தவனிடத்தே விரையத்தானே சென்று பற்றுமென்று நீ சொல்லுகின்றாயாயின், அப்படி விடப்பட்ட பெரியகணைக்கும் இலக்கைநாடி யெய்வானொரு வில்லிபோல வேண்டுமாதலால், ஆன்மாக்கள்செய்த கன்மங்களை அநுபவிக்கும்படி கூட்டுவான் ஒரு கர்த்தாவேண்டும். ௧



ஏனை தொன்று புற்க லத்தின் எய்து மென்னின் நாசமே
காண லாகும் அக்க டம்க ழிந்த தன்மை இல்லவை
பூண வேண்டும் மேலு றும்பொ ருத்தமின்மையொன்றினின்
மாணவே அணுப்பொ ருள்நிகண்ட வாதி வைத்ததே. ௧௬௦

(உரை) நீ கூறிய புற்கலப் பொருளாகிய கல்லும் இரும்பும் மரமும் ஓரறிவை யுடையவென்று நீ கூறின், ஓரறிவை யுடைய எல்லாந் தானே கெடுதல் காணலாகும்; அக்கல்லிரும்புகள் தானே வடிவுகெடுமுறைமை காண்டலில்லை. அன்றியும், பொருந்த ஓரறிவுண்டாயிற் கல் இரும்பு மேல் நரக சுவர்க்கம் பொருந்தவேண்டும். அது பொருந்தாமையுங் காணலாகும். ஒன்றினும் ஓரறிவுடைத்தென்று சொல்லப்படாத கல்லிரும்புகள் அணுப்பொருளாக மாட்சிமைப்படவைத்து நிகண்டவாதி நீ சொன்னாய் இதனை வேறு சொல்வாரில்லை. ௧௦

ஆறு காரி யங்கள் மாற வேத வங்க ளாமெனின்
மாறி வாணி கஞ்செ யாதி ருக்க வந்தி டாதனம்
ஈறி லாத வூழ தென்னின் எங்கு முள்ள தூழதே
பேறு காரி யம்வி டப்பி றப்ப தில்லை பேசிலே. ௧௬௧

(உரை) அறுவகை உவர்ப்புக்களும் நீங்கவே தவமாமென்று நீ கூறின், பொருள்களைப் பரிவர்த்தனைசெய்து வாணிகஞ் செய்யாதிருப்பப் பொருள்வந்தடையாது. அதுபோல, உவர்ப்புமாறி ஒருதவஞ்செய்யாதிருந்தால் தவம்வந்து கூடாது, கேடில்லாத முன்னை வினைப்பயனாலே தவமுண்டாமென்று சொல்லின், உவர்ப்பைக் கைவிடுதல் முதலாயினவும் முன்னை வினைப்பயனுமாதலால், தவமாகியபேறு தவஞ்செய்தலாகிய காரியத்தைவிட்டால் உண்டாகாது சொல்லுங்காலத்து.

கந்த ரச ரூப பரிச சத்த பரிணாமம் ஆறும் உவர்ப்புக்கள். தவ ஒழுக்கங்களினின்று தவஞ்செய்தால் அல்லது ஆறுகாரியத்தை விடுதலினாலே தவஞ்சித்தியாதென்பது கருத்து. ஆறுகாரியம்—உழவு, தொழில், வரைவு, வாணிகம், சிக்ஷை, சிற்பம் என்பாருமுளர். ௧௧

உடல்வ ருந்தல் மாதவங்கள் உறுதி யென்று ரைத்திடில்
படவ ருந்து நோயி னோர்கள் படர்வர் பொன்னெ யில்எனாய்

திடவ ருந்த இன்பம் இச்சை செய்தல் செய்தல் செய்தியே
கெடஅ ரிந்திடாய் உன்நாசி கேடில் இன்பம் உன்னியே.

(உரை) சரீரம் வருந்துதலே பெரியதவத்திற்கு உறுதியென்று நீ சொல்லின், துக்கமாகவுடல் வருந்தச் சரீரஇன்பத்துக்கு மாறுபாடு செய்தலைச் செய்வதுவே கேடில்லாத மோக்ஷத்தின் செய்தியென்ற மையான் நோயினுன் மனோதுக்கிகளாய் மெலிவோர் பொன்னெயில் வட்டஞ் சேர்குவரென்று நீ சொல்லாய், முத்தியின்பத்தை ஆசை செய்தல் சரீரம்வருந்தச் செய்தற்றன்மையே யென்னின், அந்த முத்தியின்பத்தைக் கருதி உன்மூக்கைக் கெடுக்கும்படி அறுத்திடு வாயாக. ௧௨

பூர்வ கன்மம் அற்றிடப் புசித்த பின்பு பொன்னெயில்
நேர்வ தென்னின் அக்கன் மத்து நிச்சய மிலாமையில்
தீர்வ தின்மை தீரின் வாயில் சேர்வ தின்மை தெண்கடல்
நீர்வ றந்த பின்பு பூனை மீன ருந்த நின்றதே. ௧௩

(உரை) முன் ஜநநங்களிலுள்ள கருமந்தொலைய இந்த ஜநநத்திலே புசித்தபின்பு பொன்னெயில்வட்டத்தைச் சென்று பொருந்துமென்று நீசொல்லின், அக்கன்மத்துக்கு அளவின்மையால் நியமிக்க அறிவது இல்லையாய்ப் புசித்துத்தொலையாதாம், கன்மம் புசித்துத் தொலைவுபெற்றால் இந்திரியங்களுடன் சத்தாதி கூடுவதின்மையாம்: அவை கூடாதொழியவே மோக்ஷ வுபாயமான தவஞ்செய்தலும் இல்லையாம்; ஆதலால், கன்மத்தைத் தொலையப்புசித்துப் பொன்னெயில் வட்டத்தை அடைவோமென்று நீ கருதியிருத்தல், பூனை தெளிந்த சமுத்திரத்து நீர் வற்றினவுடனே மீன் தின்னக்கடவோமென்று கருதி அது வற்றுமளவும் பார்த்திருந்த தன்மையை ஒக்கும்.

கூறு கூவல் மன்னும்அக் குடம் குறித்து நீள்கரை
ஏற லுற்ற தன்மை நீஒருத்த ரின்றி ஏறுதல்
வேறொ ருத்தன்அக்கு டத்தை மீது நின்றெ டுக்கவே
ஏற லுற்ற தன்மை யில்சிவன்தி றத்து நின்றிடே. ௧௪

(உரை) சொல்லப்பட்ட கிணற்றினுட்கிடக்குங் குடம் கரையை நோக்கித் தானே யேறினும் [illegible] கர்த்தாவின்றிப் பொன்னெயில் வட்டத்தை நீ [illegible], ஒருத்தன் அக்-

இவர்கள் இப்பொழுது தமிழ்க்கல்வி வளர்ச்சி யொன்றினையே தமது முழுநோக்கமாகக் கொண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை யலங்கரித்து விளங்குகின்றார்கள். வடமொழியிலுள்ள சுக்ரநீதியைச் செவ்விதாகத் தமிழில் இவர்கள் மொழிபெயர்த்துள்ளமை தமிழ் மக்கள் நன்கறிந்ததொன்றே; கௌடிலியாது அர்த்த சாஸ்திரத்தை மொழிபெயர்த்து வருகின்றார்களென்றறிந்து மிகவும் மகிழ்கின்றோம். இன்னும் மிருகேந்திரம், பௌஷ்கராவிருத்தி முதலிய பல நூல்களை இவர்கள் மொழிபெயர்த்துத் தமிழ்த்தொண்டு புரிவதற்கு இறைவன் முன்னின்றருள் புரிக.

'சுவைபல மலிந்து அவையுற விளங்கும்
மாட்சிமிக் குடைய "மண்ணியல் சிறுதேர்"
எண்ணுடை மக்க ளிதயத் தியலி
கண்ணுடை யோர்க்குக் காட்சியிற் கவினி
இன்றும் என்றும் நின்று நிலவுக'

**பெரியபுராணம்:**—திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், பி. எ. அவர்கள் உரை-முதற் சஞ்சிகை - இச்சஞ்சிகையைத் திரு. முதலியாரவர்கள் நமது பார்வைக்கு அனுப்பி வைத்தமைக்காக அவர்கட்கு நன்றி கூறுகின்றோம். திரு. முதலியாரவர்கள் பெரிய புராணத்தைத் தமது ஆயுள் முழுமையும் பயின்று ஆராயும் சிறந்த நூலாகக் கொண்டுள்ளாரென்பது, சைவ உலகம் அறிந்ததொன்று. சில ஆண்டுகட்கு முன் இப்பெரியார் சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆதரவில் பெரிய புராணத்தையும் சேக்கிழாரையும் பற்றிய சொற்பொழிவுகள் சிலவற்றை நிகழ்த்தியதும் அன்பர் பலர் நினைவிலிருக்கும். இவ்வுரை வெளியீட்டில் தமக்குத் தேவார முதலிய திருமுறைகளிலுள்ள சிறந்த பயிற்சி, நுண்ணிய ஆராய்ச்சி முதலியவைகட்கேற்ப இவ்வுரையாசிரியர் பற்பல நுட்பமான பொருள்களை மிகத் திறம்படத் திருமுறை மேற்கோள்களோடு விளக்கியுள்ளது பெரிதும் பாராட்டத்தக்கது. கல்வெட்டு முதலிய சரித்திரச் சான்றுகளும், தில்லை, திருக்கைலாயம் முதலிய தலங்களின் படங்களும் இந்நூற்றாண்டுக்கேற்ற முறையில் இவ்வெளியீட்டில் சேர்க்கப்பெற்றுள்ளன. திருமுறையாராய்ச்சியில் தலை சிறந்து விளங்கிய காலஞ்சென்ற கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் பி. எ., அவர்களது குறிப்புக்களும் இடையிடையே தரப்பெற்றுள்ளன.

பெரிய புராணத்தை ஒரு சமய நூலாக மட்டும் கொள்ளாது ஒரு சிறந்த தமிழ்க்காவிய நூலாக்கொண்டு காவியச்சுவை நிரம்பிய பகுதிகளை இவ்வுரையாசிரியர் செம்மையாக விளக்கியுள்ளது மிகவும் விரும்பத்தக்க முறையேயாம். இந்நூலிற் பொதிந்து கிடக்கும் சாத்திரக் கருத்துக்கள் பல உந்திகளிறு உயர்போதம் சித்திமுதலிய சிறந்த சாத்திரமேற்கோள்களோடு விளக்கப்பெற்றுள்ளன.

தமிழிலும் சைவத்திலும் பற்றுடைய ஒவ்வொருவரும் இவ்வுரை வெளியீட்டை வாங்கிப் பயன் பெறுக. இப்பெரும்பணி முட்டின்றி முடிதற்குரிய எல்லா நலங்களையும் திரு முதலியாரவர்கட்கு முழுமுதற் கடவுள் அளிப்பாராக.

இவ்வுரை கோவைத் தமிழ்ச்சங்கத்தாரால் வெளியிடப்படுகின்றது. 160 பக்கத்துக்குக் குறையாத சஞ்சிகை ஒன்றின் விலை (வி. பி. தபாற் செலவுடன்) ரூ 1 6-0. பன்னிரண்டு சஞ்சிகைகளுள் நூல் முழுமையும் முற்றுப்பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. வேண்டுவோர் இன்றே திரு. எஸ். நமசிவாயன், கோவைத் தமிழ்ச்சங்கம், வைசியாள் வீதி, கோயன்புத்தூர் என்ற விலாசத்துக் கெழுதுக.

**திருவிளையாடற் புராணம்:**—ஈக்காடு இரத்தினவேல் முதலியார் உரையும் விசேடமும். சைவசமயத்துக்கு இருகண்களென விளங்கும் பெரிய புராணமும் திருவிளையாடற் புராணமும் ஒரே காலத்தில் உரையுடன் சஞ்சிகை ரூபமாக வெளிவருவது சைவ நன்மக்கள் செய்த தவத்தின் பயனேயாகும். சிவபராக்கிரமம் முதலிய பல சமய வெளியீடுகளின் ஆசிரியராகிய ஈக்காடு இரத்தினவேல் முதலியாரவர்கள் உரையும் விசேடக் குறிப்புக்களும் ஆங்கிலத்தில் (Variorum Edition) பெருந் தொகுதிப்பதிப்பு என்று கூறப்படும் முறையிலுள்ளமை அறிஞர்கள் அறிந்ததொன்று. பத்துப் பாடல்கள் உரையையும் விசேடக் குறிப்புக்களையும் ஒருவர் ஊன்றிப் பயின்றால் பிரசங்கம் செய்யக்கூடிய ஆற்றலை எளிதிற் பெறலாம். உரை எளிய நடையில் மூலத்திலுள்ள நுட்பங்களை யெல்லாம் விளக்கும் பெற்றியையுடையது. விசேடக் குறிப்புக்களில் வேறு பல நூல்களிலிருந்து பல கருத்துக்களும் பாடல்களும் விளக்கப்பட்டிருத்தலால் ஒப்பிட்டறியும் கூர்ந்த ஆராய்ச்சிப் பழக்கம் இவ்வெளியீட்டினால் நன்கு வளரும். சென்ற இரண்டு ஆண்டுகளில் பெரிய புராணத்தை உரையோடு சஞ்சிகையாக வெளியிட்டு முற்றுவித்த சாது அச்சுக் கூடத்தினர் இப்போது இப்புராணத்தை அந்நன்முறையில் வெளியிட்டுபகரிக்க முன் வந்துள்ளது அவ்வச்சுக்கூட உரிமையாளரது சைவப்பற்றையும் உபகாரச்சிந்தையையும் நன்கு புலப்படுத்தும். இவ்வெளியீடு முழுமையும் 25 சஞ்சிகைகளில் முடியுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. வெளியூர் அன்பர்கட்குப் புத்தகம் முழுமையும் (விலையும் தபாற் செலவும் உட்பட) ரூ 5½-க்குத் தரப்படும். வேண்டுவோர் இன்றே முருகவேள் புத்தகசாலை, 12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை என்ற விலாசத்துக் கெழுதுக.

---

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.